Registered as a News Paper in Sri Lanka
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை (21.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 052

## புலிகளின் கொலை மையம் ஒட்டுசுட்டானில் கண்டுபிடிப்பு

### முன்னாள் புலிகள் அடையாளம் காட்டினர்

(கொழும்பு)

புலிகளின் காவலில் இருந்த கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட காட்டுப்பகுதியில் உள்ள இரகசிய கொலைமையம் இப்போது அடையாளம் காணப் பட்டுள்ளது.

முன்னாள் புலிகளின் உதவியுடன் மேற்படி இரகசிய கொலை மையம் நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டது.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் உயர் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்குச் சென்று புலிகளின் இந்த கொலை மையத்தை அடையாளம் கண்டு கொண்டனர்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டவர்கள் எரியூட்டப்பட்டதாக கூறப்படும் மேற்படி இடங்களை கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீனும் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

முல்லைத்தீவு 19 ஆம் பக்கம் பார்க்க

## வேட்பு மனுத்தாக்கல் திகதி அறிவிப்பு இன்று வரும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி அனேகமாக இன்று அறிவிக கப்படலாம் என்று தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்று தெரிவித்திருந்தார்.

அடுத்த 48 மணித்தியாலத்திற்குள் ஜனாதிபதித்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட உள்ளதாக நேற்று மாலை அவா குறிப்பிட்டுள்ளார்.

21 நாட்களுக்குள் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதி அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினத்திலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன் சிமெந்து ஆலை மீண்டும் இயங்க அனுமதி

(கொழும்பு)

**கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட காங்கேசன் சிமெந்து ஆலை உட்படஐந்து தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கும் அதனூடாக ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற படுத்திக் கொடுப்பதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில், ஆனையிறவு உப்பளத்தை மீள இயக்குவதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் உப்பளத்தின் தொழிற்துறை சார்ந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பணிகள் ஆரம்பிக்கப்படும்போது முதற்கட்டமாக 25000 மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும்.

இதேபோன்று, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை நவீன முறையில் நிர்மாணித்து அதனூடாக குளோரின் சார்ந்த இரசாயன உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## மரண தண்டனைக் கைதிகள் மீது கருணை காட்டுமாறு கோரிக்கை




(கொழும்பு)

மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு விடுதலை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இதே வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று யாழ். மீனவர்கள் விடயத்திலும் உரிய கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் மீது கருணை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் உள்ள சட்ட சிக்கல்களை அகற்றுவதற்கும் அவர்களை விடுவித்துக்கொள வதற்கும் அதிகபட்சமாக நான் முயற்சிப்பேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தல்; வெளியாகியது அறிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கையொப்பமிட்டுள்ளதாக ஜனாதிப்பதி செயலகம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

இதன்மூலம் எதிர்வரும் 2015ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு கோரி ஜனாதிபதி மகிந்த, தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிவிற்கு உத்தியோகபூர்வமாக வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிக்குமாறு கோரி அரச அச்சகத்திற்கு ஜனாதிபதி கையொப்பமிட்ட ஆவணம் ஏற்கனவே

19 ஆம் பக்கம் பார்க்க

### மழை தொடர வாய்ப்பு வானிலை அவதான நிலையம் தகவல்


(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் 866.1மில்லிமீற்றர் அளவான மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாக திருநெல்வேலி வானிலை அவதானநிலையம் தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் இம்மாதம் 17ஆம் திகதி 77.9 மில்லிமீற்றரும், 18ஆம் திகதி 46.7மில்லிமீற்றரும், 19ஆம் திகதி 18.8

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் கொழும்பு வருவார் மோடி



(புதுடில்லி)

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதற்கான தயாரிப்பு வேலைகளில் இரு நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக நரேந்திர மோடி கொழும்பு செல்லவுள்ளதால், அவரது பயணத் திட்டத்தை வெற்றி பெறச் செய்யும் நோக்குடன் இந்திய, இலங்கை அரசுகள் ஏற்கனவே கூட்டாகச் செயல்பட்டு வருகின்றன. அதேவேளை இலங்கை விவகாரங்களைக் கவனித்து வரும் டில்லியில் உள்ள 19 ஆம் பக்கம் பார்க்க



# யாழ்-கிளிநொச்சி குடிநீர் தொடர்பான கலந்துரையாடல்

## கலாநிதி விக்கி நாளை சிறப்பு பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்வழங்கல்' பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலானது நாளை காலை 9.30 இற்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும்

வளவாளராக பொறியியல் கலாநிதி கே.விக்னேஸ்வரன் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் மற்றும் முன்னாள் பிரதிப்பணிப்பாளர் நீர்ப்பாசனத்திணைக்களம்) கலந்து கொண்டு உரையாற்றுவர்.

# சட்டவிரோதமாக மதுபானம் விற்றவர் கைது

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் பொதுச்சந்தைக்கு அருகில் சட்டவிரோத மதுபாவனை விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டின் அருகில் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 போத்தல் சட்டவிரோத மதுபானத்துடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி ஜெயசாந்த சில்வா தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார. (81)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1975, ஆயிலியம் 5 4 நற்குணமுள்ள லண்டன் கொம்பியூட்டர் எஞ்சினியர் UK PR உடைய மணமகனுக்கு ஓரளவு படித்த மணமகள் தேவை.

தொடர்பு-021 492 5047

vijey40 @hotmail.com (R/377)

## புத்தகங்கள்

பாவித்த நல்ல நிலையில் உள்ள காணனி,எலக்ரோனிக்ஸ், சமூகவிஞ்ஞானம், கதைப்புத்தகங்கள், மகிசின், என்பன தேவைப்படுவோருக்கு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு- 021 492 5047 (R/377)

## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088. (C/3727)


# வடமாகாண கூட்டுறவு மாபெரும் மாநாடு நாளை

## பிரதம அதிதியாக டக்ளஸ் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க மாபெரும் மாநாடு நாளை இடம்பெறும்.

வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் வ.சிவகுமார் தலைமையில் மு.ப 10.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.


முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாண உறுப்பினர் சயந்தன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், உதவித் தொழில் ஆணையாளர் திருமதி பீ.ஜெகதீஸ்வரன், அரச அதிபர்களான சு.அருமைநாயகம், என்.வேதநாயகன், பந்துலஹ்ரிச்சந்திரா, எஸ்.தேசப்பிரிய ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்.

இதன்போது கூட்டுறவு ஊழியருக்கு நீண்டகாலமாக சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமையால் தமது வாழ்வாதாரத்தினை கொண்டு பெரிதும் கஷ்டப்படுவதனால் அடிப்படைச் சம்பளத்தினை 50 வீதமாக அதிகரித்து வழங்கும் கோரிக்கை விசேடமாக முன்வைக்கப்படவுள்ளது.

# டெங்கு பாதிப்பு நேற்றும் இருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)



டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய இருவர் நேற்று யாழ.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொக்குவில் பகுதியில் இருந்தும ஒருவருமாக இருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் பெய்துவரும் மழையை அடுத்து இந்த நோயின தாக்கம் பரவலாக இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் இந்தமாதம் நேற்றுவரை சுமார் 60 பேர் வரை இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)


## பட்டங்கள் பல பெற்று நீடூழி வாழ்க



யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி (B.Sc) பட்டம் பெற்ற எமது சக கிராம அலுவலரான இரவீந்திரன் இராகவமேனன் அவர்களை அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

கிராம அலுவலர்கள்
வலி.மேற்கு

(C/3472)


# தொழில் பயிற்சிக்கு காரைநகரில் ஆட்சேர்ப்பு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வீட்டு மின்னிணைப்பு, தகவல் தொழில்நுட்பம், கட்டட வினைஞர், தையல், மரவேலை காய்ச்சி இணைப்புஆகிய புதிய பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இப்பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புவோருக்கு தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் (NVQ) வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இணைய விரும்புவோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி நிலையம் வலந்தலைச் சந்தி காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீமுருகன் கேட்டுள்ளார்.

பயிற்சிகள் யாவும் தை மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகும். (54)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2382 திகதி 18-11-2014

ஆங்கில எழுத்து: S

வெற்றி எண்கள் 04 40 66 67

போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ. 18,988,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 217949 | 20/- | 4,358,980/- |
| 2 இல | 15587 | 100/- | 1,558,700/- |
| 3 இல | 327 | 1,000/- | 327,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8601 | 40/- | 344,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 556 | 1,000/- | 556,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,988,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 10388 | 100/- | 1,038,800/- |
| 2 இல + போனஸ் இல | 492 | 500/- | 246,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 453 | 200/- | 90,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 254392 | | 11,113,120/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 19,581,750/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3587)


# ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி குருமார் ஒன்றியம் பிரார்த்தனை



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் 69 ஆவது 'பிறந்த நாளையொட்டி யாழ்.சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் இந்து குருமார்களினால் ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்து குருமார் ஒன்றியத்தின் மண்டபத்தில் வழிபாடுகள் இடம்பெற்றன.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் பீடாதிபதி மகேஸ்வராக்குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடமாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் எஸ்.தவராசா ஜனாதிபதியின் இந்து விவகாரங்களின் இணைப்பாளர் பாபுசர்மா விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

இந் நிகழ்வில் மகாதேவாக்குருக்கள், மனோகரக்குருக்கள், சுந்தரசர்மா ஆகியோர் ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி உரையாற்றினார்கள்.

இந் நிகழ்வில் இந்து குருமார்களுக்கு ஜனாதிபதியின் பிறந்த நாளையொட்டி அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

## அச்சுவேலி - யாழ்.பாடசாலை பேருந்து சேவையால் பரீட்சை எழுதமுடியாது துன்பப்படும் மாணவர்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி - யாழ்ப்பாணத்துக்கான பாடசாலை விசேட பேருந்துச் சேவை ஒழுங்கற்றுக் காணப்படுவதால் யாழ்ப்பாணத்து பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பாடசாலை மாணவர்கள் கவலையுடன் விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மாணவர்கள் தெரிவித்துள்ளதாவது,

அச்சுவேலி - யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் ஆண்களுக்கான விசேட பேருந்து சேவை,, பாடசாலைகளில் பரீட்சைகள் ஆரம்பித்த நாள் முதல் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும், அதற்கு முன்னர் காலை வேளைகளில் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் பேருந்து மீண்டும், மாலை சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் வீடு திரும்புவதற்கு சிரமங்களை எதிர் நோக்கிய வண்ணம் யாழ்பேருந்து நிலையத்துக்கு சென்றால் அங்குள்ள அதிகாரிகள் அச்சுவேலியா என கேட்டு அசண்டையீனம் செய்வதாகவும் ஏனைய சிலர் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பேருந்தில் 3.30 மணிக் குப் பின்னரே ஏற்றி விடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி இந்த பேருந்து அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் பாடசாலைகளுக்கு குறித்த நேரம் தவறிச் செல்லும் மாணவர்கள் பாடசாலைகளில் மாலை 5 மணி வரை தண்டனை அனுபவிப்பதுடன் அதற்குப் பின்னர் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு சென்று பேருந்தில் ஏறி எத்தனை மணிக்கு தாம் வீடு செல்வது என அதிகாரிகள் சிந்திக்க மாட்டார்களா, எனவும் கேள்வி எழுப்பி கின்றனர்.

.மேலும் இப்பாடசாலை பேருந்து சேவையின் போது பொதுமக்களை ஏற்றுவதுடன் அவர்களை யாழ்ப்பாணத்தில் இறக்கிய பின்னரே தம்மை பாடசாலைக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தனர். அத்துடன் பருவகால சீட்டை பெற்றுக் கொண்ட மாணவர்கள் பணம் கொடுத்து தனியார் பேருந்தில் செல்ல வேண்டியுள்ளமை வருந்தமளிப்பதாகவும் க.பொ.த.சா/தர பரீட்சை நடைபெறும் இக்காலத்தில் பாடசாலை சேவை இல்லாததால் தாம் தாமதமாக பாடசாலைக்கு சென்று அரைகுறையாக பரீட்சையில் தோற்றுவதாகவும் இதனால் தமது எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதுமட்டுமன்றி யாழ்.பேருந்து நிலையத்துக்கு தொலைபேசி தொடர்பு கொண்டு பேருந்து வரவில்லை என கூறினார். அச்சு வேலியா என கேட்டு விட்டு தொடர்பை துண்டிப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே இந்த மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு அத்திவாரமாக உள்ள கல்வியை சுமுகமாக தொடர இ.போ.ச அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

யாழ்.சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கர்ப்பிணித்தாய்மார்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல், சத்துணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தீர்மானம் சாவகச்சேரி நகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த கூட்டத்தொடர் - நகர சபை கட்டடத்தொகுதியில் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, சாவகச்சேரி பிரதேத்திலுள்ள கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கும் நடவடிக்கைகளை நகர சபையின் 2015 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளட்க்கி, திட்டத்தை 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை நகர சபை உறுப்பினர் அ.பாலமயூரன் சபைக்கு கொண்டு வந்தார். இந்த தீர்மானத்தை மற்றொரு உறுப்பினர் நா.கிஷோர் வழிமொழிந்தார்.

உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி வற்றாப்பளையில் விசேடபூஜை




(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆசீர்வாதம் வேண்டி மு.ப 8.00 மணிக்கு பூசைகள் இடம் பெற்றன.

முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் 69 ஆவது பிறந்த நாளில் இலங்கைக்கும் ஜனாதிப்திக்கும் நல் ஆசி வேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் அர்ச்சனைகளும் செய்யப்பட்டன.

இதில் முல்லைத்தீவு இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ஜெஹத் டயஸ் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மேலதிக அரசாங்க அதிபர் மோகனதாஸ் இராணுவ அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் பொது மக்களும் பங்கேற்றனர். (40)

# ஜனாதிபதித் தேர்தலும் தமிழ்த் தரப்பும்




வடபுலத்தான் எழுதுவது

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகள் இன்னும் ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டேயிருக்கின்றன.

ஒரு வேட்பாளரையே கண்டுபிடிக்க முடியாமல், தேடித் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் எப்படித் தேர்தலில் வெற்றிபெறப் போகிறார்கள்? என்று கேட்கிறார் அப்பாவிப் பொது மகன் ஒருவர்.

ஆட்சி மாற்றம் வேண்டும். மாற்றுத் தலைமை வேண்டும் இந்த ஆட்சிக்கு தக்க பாடம் படிப்பிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் பல ஆண்டுகளாகக் கூறிவருகின்றன. இதே அபிப்பிராயத்தை பெரும்பாலான ஊடகங்களும் சொல்லி வந்திருக்கின்றன. அரசியல் ஆய்வாளர்களும், விமர்சகர்களும்கூட மாற்றுத் தலைமை வேண்டும். ஆட்சி மாற்றம் வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அமெரிக்காவுக்கும் இதுதான் விருப்பம். இந்தியாகூட புதிய முகம் ஒன்றையே விரும்புகிறது.

தங்களால் கையாளக் கடினமான ஒருவர், வெற்றிகளின் நாயகனாகத் தன்னை பிரகடனம் செய்த ஒருவர் ஆட்சியில் இருப்பதை இவர்கள் விரும்பவில்லை.

ஆனால், இதற்கு மாற்றாகவும் ஒருவரை இவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவை ஜனாதிபதியாக பதவி வகித்த நீண்ட காலத்தில், மாற்றுத் தேர்வு ஒன்று வேண்டும் என்று சிந்திக்கப்பட்டு வரும் நீண்ட சந்தர்ப்பத்தில்கூட ஒரு மாற்றாளரைக் கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்டது.

இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்புகள் வரும்போது எதிரணியினர் தலையைப் பிய்த்துக்கொள்கிறார்கள். இரவு பகலாக தூக்கம், சாப்பாடு எதுவுமே இல்லாமல் மந்திராலோசனை செய்கிறார்கள்.

இதுதான் படு பலவீனமான செயல். அதாவது எதிரணியின் பலவீனமே இதுதான்.

மாற்றுத்தலை ஒன்றைக் கண்டுபிடிக்கவோ, உருவாக்கவோ முடியாமல் இதுவரை இருந்ததும், இன்னும் அப்படியே இருப்பதும் இவர்களுடைய பலவீனமன்றி வேறென்ன?

இந்த நிலைமையானது மகிந்த ராஜபக்ஷவை மிகப் பலமாகவே வைத்திருக்கப்போகிறது. அவர் தொடர்ந்தும் வெற்றிகளின் நாயகனாகவே இருக்கப்போகிறார். வெல்லக் கடினமான, கையாளக் கடினமான ஒருவராகவே இருக்கப்போகிறார்.

எதிரணிகளிடமும் மாற்றுச் சிந்தனையாளர்களிடமும் உள்ள மிகப்பெரிய பலவீனம், இவர்கள் எல்லோரும் உள்ளூர் அரசியல், சமூகவியல் யதார்த்தத்தைப் பற்றிச் சிந்திக்காமல், அவற்றைக் கணக்கில் எடுக்காமல் வெளிச் சக்திகளின் மீது நம்பிக்கை வைத்திருப்பதாகும்.

வெளிச் சக்திகள் ஏற்படுத்துகின்ற அழுத்தங்களும் நெருக்கடிகளும் மகிந்த ராஜபக்ஷவை பலவீனப்படுத்தும், அவரை ஆட்சியிலிருந்து அகற்றல் நடந்துவிடும் என்றே இவர்கள் நம்பினார்கள். அப்படித்தான் இப்போதும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இது இந்த நாட்டுக்கு நல்லதேயல்ல.

வெளியாருக்கு முகவர்களாக இருக்கும் அடிமைச் சேவகர்களின் வரலாறும், அப்படி இருந்தவர்கள் தங்கள் நாடுகளை வைத்திருந்த சீரும் அறிந்தவர்களுக்குத் தெரியும். அது எவ்வளவு சீரழிவைத் தந்தது என.

இலங்கையில் அப்படியான ஒரு நிலையைத்தான் உண்டாக்குவதற்கு இந்த மாற்றாளர்கள் முயற்சிக்கின்றார்கள்.

உண்மையில் மாற்றுத் தலைமை என்பது அப்படி அமைந்திருப்பதில்லை. அது புரட்சிகரமாக மக்களை ஆதாரமாகக் கொண்டு செயற்படுவதாக, சொந்த நாட்டில் தன்னுடைய வேர்களையும், நம்பிக்கையையும் உடையதாகவே இருக்கும்.

அதுதான் ஆட்சியில் இருப்போருக்கு சவாலாக இருக்க முடியும். அப்படி இருந்திருந்தால், இப்பொழுது ஜனாதிபதியாக 'இருக்கும் மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தானே அதிபராக இருக்க வேண்டும் என்று சிந்தித்திருக்க மாட்டார்.

பேசாமல் இருக்கும் கதிரையை விட்டு எப்போது ஓடப்போகிறேன் என்றே சிந்தித்திருப்பார்.

எதிரணியினரும் மாற்றாளர்களும் இன்னும் நீண்ட தூரம் நடக்க வேண்டியிருக்கிறது.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'நாய் பெற்ற தெங்கம் பழம்'

நாயிடம் போர்த் தேங்காயைக் கொடுத்தால் அது நடுவீட்டுக்குள்தான் உருட்டி விளையாடும் என்று பழமொழி உண்டு. பகுத்தறிவில்லாத பிராணி என்பதால் அப்படி கிடைத்த பொருளின் தன்மை அறியாது அதை வீணாக்குவதை நாம் பொருட்படுத்தாது விடலாம்.

ஆனால், மனிதர்கள் அதிலும் மக்களுக்குத் தலைமை தாங்குவதாகச் சொல்லிச் செயற்படும் அரசியல்வாதிகள் தங்களுக்குக் கிடைத்த – கிடைக்கும் வாய்ப்புகளை அவ்வாறு வீணடிப்பது குறித்து நாம் விசனமுறவே வேண்டும்.

கடந்த மாகாண சபை தேர்தலில் தமிழ் மக்களின் பேராணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அதன்மூலம் பதவிகளையும் அதற்குரிய அதிகாரங்களையும் பெற்று வைத்துக் கொண்டு இன்று அவர்கள் செய்துகொண்டிருக்கும் கைங்கரியங்களைப் பார்த்தால்... யாரிடம் நோவது தெரியவில்லை.

முன்பெல்லாம் அவர்களது கட்சிக் கூட்டங்களிலும், ஊடக அறிக்கைகளிலுமாகத்தான் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டிருந்தார்கள். அதுதவிர, தேர்தல்களின் போது வேட்பாளர் தெரிவு வரும்போது பிடுங்குப்படுவார்கள்.

பிறகு பதவிகளைப் பங்கிடும் நேரத்திலும் ஒருவரையொருவர் எதிர்த்த குஸ்திகளில் வீராவேசம் கொப்பளிக்கும். உட்பூசலில் சக்தியைச் செலவழித்துச் சமராடும் அந்த சமயங்களில் அரசுக்கெதிரான வீராவேச வாய்முழக்கங்களைக் கூட செய்ய முடியாதவாறு சற்று சோர்ந்து அதையெல்லாம் ஒத்திவைத்திருப்பார்கள்.

இதெல்லாம் ஒரு தேர்தல் முடிந்து மறு தேர்தல் வரும்வரை காலகாலமாக அவர்களுக்குள் நடக்கும் அடிபாடுகள்தான். கட்சிக் கூட்டங்களிலும் ஊடகங்களிலும் நடத்திக்கொண்டிருந்த இந்தச் சண்டைகளை இப்போது மாகாண சபை கிடைத்திருக்கிறது அல்லவா... அந்தக் கட்டிடத்திற்குள் போயிருந்து நடத்துகிறார்கள்.

மாகாண சபை மைக்குகளும் ஏசியும் அலவன்சுகளும் இதர வசதிகளும் இவர்கள் தங்களுக்குள்ளான குஸ்திகளை நடத்துவதற்குத்தான் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறைவாக இருப்பது நல்ல வாய்ப்பாகப் போய்விட்டது கூட்டமைப்பினருக்கு. பேசும் நேரத்தைத் தாங்களே அதிகம் எடுத்துக்கொண்டு, தங்களுக்குள்ளான சண்டையைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

"துணிச்சலிருந்தால் என்னோடு மோதிப்பார்", "என் ஊர் எல்லையில் காலை வைத்துப் பார், அதற்குப் பிறகு தெரியும் சங்கதி"... என்றவாறெல்லாம் சாறத்தை மடிச்சுக் கட்டாத் குறையாக தொடைகள் தட்டித் தூள்பறக்கிறது மாகாணசபை.

அவர்களும் என்ன செய்வார்கள்? "எந்த வேலையும் செய்ய அரசாங்கம் ஒத்துழைக்குதில்லை... நிதி தருகுதில்லை... மாகாண சபையால செய்ய ஒண்டுமில்லை" என்று முதலமைச்சரும் கட்சித்தலைமையும் தெளிவாகப் படம் போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

இதன்பிறகு, மாகாண சபையில் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தென்ன... என்ன தீர்மானத்தை நிறைவேற்றியென்ன... ஒன்றும் செய்துவிடக் கூடாது என்பதுதான் கட்சிக் கட்டுப்பாடாயிற்றே! கொள்கை முடிவாயிற்றே!

எந்தெந்த வகைகளில் எல்லாம் மத்திய அரசுக்கெதிரான கண்டனப் பிரேரணைகளை நிறைவேற்றலாம் என்று மண்டையைக் குழப்பி அவ்வப்போது அந்தவகையில் சில தீர்மானங்களும், சர்வதேசம் செய்யவேண்டியவை பற்றி சில தீர்மானங்களும் போட்டுவிட்டு, மற்றும் நேரமெல்லாம் உள் சண்டையைக் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான்.

மாகாணசபையை எடுத்து வைத்துக்கொண்டு, இப்படி அடுத்த மாகாணசபைத் தேர்தல் வரும்வரைக்கும் வெறும்பேச்சு விளையாட்டு நடத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து ஊடகங்களும் வினாவெழுப்புவதில்லை, புத்திஜீவிகளும் இடித்துரைப்பதில்லை, மக்களும் அலட்டிக்கொள்வதில்லை...
என்றால் அரசியல்வாதிகள் வேறெப்படி இருப்பார்கள்? ம்... என்ன மாதிரியான ஒரு சமூகத்தில் வாழ்கிறோம் நாம்! -ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது'

——— மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# இலங்கை பல்கலைக்கழகங்களில் ஐயாயிரம் வெளிநாட்டு மாணவர்கள்

(கொழும்பு)

சுமார் ஐயாயிரம் வெளிநாட்டு மாணவர்கள் இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களிலும், பட்டம் வழங்கும் நிறுவனங்களிலும் கல்வி கற்று வருவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் ஒரு இலட்சம் மாணவர்களை பல்கலைக்கழகத்தில் இணைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. மேற்கு நாடுகளில் நிலவும் பிரச்சினைகளால் மத்திய கிழக்கு நாடுகளின் மாணவர்கள் தமது உயர் கல்வியை கற்பதற்காக இலங்கைக்கு வருகை தருகின்றனர். இலங்கையில் கல்வி கற்பதற்கான அமைதியான சூழல், குறைந்த கட்டணம், மற்றும் சிறந்த கால நிலை காரணமாக, இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான் நாடுகளிலிருந்து கூட மாணவர்கள் வருகை தருகின்றனர்.

தற்போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டு வரும் தொழில்நுட்ப பிரிவிலும் மாணவர்களை அனுமதிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இந்தப் பிரிவு எதிர்வரும் 2016 திறக்கப்படும்.

அத்துடன் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் புதிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடங்களை நிறுவ முடிவு செய்துள்ளோம். இவற்றில் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த தகுதியானவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

இதனுடன் நாட்டில் இயங்கும உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் பட்டம் வழங்கும் நிறுவனங்களாக தரம் உயர்த்தப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு இப்போது வேலைப்பளு அதிகம்

## நாடாளுமன்றில் அவரே தகவல்

குழந்தை இல்லாத பெண்கள்கூட தனது அமைச்சுக்கு வந்து அது தொடர்பாக முறையிடுவதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா. நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு வருபவர்களுக்கு மத ஸ்தலங்களுக்குச் செல்லுமாறு ஆலோசனை வழங்குவேன்.

ஆனால், வேறு வழியில்லையா என அவர்கள் கேட்கின்றனர். அதுமட்டுமல்ல, கணவரைப் பிரிந்த மனைவியும், மனைவியைப் பிரிந்த கணவரும் எனப் பலர் எனது அமைச்சில் அதுபற்றி முறைப்பாடு செய்கின்றனர். கணவன் - மனைவி பிரச்சினைகள் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இப்படிப்பல சிக்கல்கள் உள்ள அமைச்சுப் பதவியைத்தான் நான் வகிக்கின்றேன். எனினும், சந்தோஷமாக சேவை செய்கின்றேன். போட்ட முடிச்சை இலகுவாக்கவும், அதேபோல் அதை இறுக்கவும் எனக்குத் தெரியும் ஆகவே, நான் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட சிறந்த ஒரு பொது வேட்பாளர் இருக்க முடியாது. என்றார்.

# ஹெல உறுமயவை சமரசப்படுத்த அமைச்சர் பஷில் களத்தில்

அரசிலிருந்து ஜாதிக ஹெல உறுமய விலகியதை அடுத்த, அவர்களை சமாதானப்படுத்தி மீளவும் அரசாங்கத்திற்குள் உள்வீர்ப்பதற்கான நடவடிக்கையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அமைச்சுப் பதவிகளைத்துறந்த உதய கம்மன்பில, சம்பிக்க ரணவங்க ஆகியோரின் இடத்திற்கு வேறொருவரை நியமிப்பதுவும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் விவசாய அமைச்சராக இருந்த உதய கம்மன்பிலவின் இடத்திற்கு வேறொருவரை நியமிக்காமல் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கரே அந்த அமைச்சுக்கான கடமையை ஆற்றிவருகின்றார். அதேபோன்று கம்மன்பிலவின் அமைச்சு வெற்றிடத்தை ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை நிரப்புவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே போன்று சம்பிக்க ரணவக்கவின் வெற்றிடத்தையும் நிரப்புவதிலலையெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு செய்வதன் மூலம் ஜாதிக ஹெல உறுமயவுடனான சமரசப் பேச்சை அமைச்சர் பசில ஆரம்பிப்பதறகு இலகுவாக அமையுமெனவும் தெரிவிக்கப்படுன்றது.

# முகப்புத்தக செய்தி பதிவேற்றத்தால் பாடசாலை அதிபர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பாடசாலை அதிபர் ஒருவர் முகப்புத்தகத்தில் (பேஸ்புக்) பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த செய்தியைப் பார்த்த பின் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நாவலப்பிட்டியவில் இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டியவில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் அதிபரை இழிவுபடுத்தி முகப்புத்தகத்தில் செய்தி தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இதனைப் பார்த்த அவ்வதிபருக்கு உயர்குருதியமுக்க நோய் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்துள்ள சிலர், அங்கிருந்த ஆசிரியர் ஒருவரை கடுமையாகப் பேசி, அவர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அமைதியற்ற நிலைமை உருவாகியுள்ளது.

இவ்விரு சம்பவங்களையும் கண்டித்து, அவர்கள் நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டி நகரில் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும், நாவலப்பிட்டிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ஏமாற்று அரசியல்வாதிகளின் தில்லு முல்லுகளும், திருகு தாளங்களும் தெரிந்திருந்தும் ஊடகங்கள் தெரியாதது போல் போகின்றனவே ஏன்? – 2



**பாராளுமன்றத்தில் வெகுஜன ஊடக தகவல் துறை அமைச்சின் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரை தொடர்ச்சி.**

**எமது இனம்** அழிக்கப்பட்டதாக அடிக் கடி நீலிக்கண்ணீர் வடிக்கிறார் நாடாளு மன்ற உறுப்பினர் அரியநேந்திரன்.

அவர் புலம் பெயர் நாடுகளுக்கு பிச்சைப் பாத்திரம் ஏந்திச் சென்ற வேளை எமக்கு ஏன் இன்னும் உரிமை கிடைக்க வில்லை என்று மக்கள் அவரிடம் கேள்வி கேட்ட போது,...

இன்னும் எந்தளவிற்கு எமது மக்களின் அழிவுகள் அதிகமாகிறதோ அந்தள விற்கு விரைவாக விடுதலை கிடைக்கும் என்று பதிலுரைத்து, அந்த மக்களின் முன்பாக மூக்குடைபட்டு திரும்பிய அரியநேந்திரன் அவர்கள் மனிதநேயம் குறித்து பேச நினைக்கலாமா என்று நான் கேட்கிறேன்.

தமது குடும்பத்தவர்களை வெளிநாடு களில் குடியமர்த்திவிட்டு அப்பாவி மக்கள் அழிந்தொழிய வேண்டும் என்று செயற்பட்டவர்கள் எமது மக்களின் நண்பர்களா? அல்லது எதிரிகளா?.. என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

ஊடகங்கள் அநீதிகளை கண்டிக்கவும், தடுத்து நிறுத்தவும் முன்வர வேண்டும். ஆனாலும், இங்கொரு ஊடக முத லாளி அநீதிகளின் மொத்த வியாபாரி யாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

தங்களது பிள்ளைகளின் திருமணங் களுக்காகவும், அந்திமகால செலவு களுக்காகவும் தங்களது வாய், வயிற்றை ஒறுத்து, எமது மக்கள் சர வணபவன் அவர்களின் சப்ரா பைனாண்ஸ் ஏன்ற மோசடி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தனர். எமது மக்கள் முதலீடு செய்த கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்தவர் இந்த சரவணபவன். நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டிய இந்த குற்றவாளி ஊடக சுதந்திரம் குறித்தும், மக்களின் விடுதலை குறித்தும் பேசலாமா என்று நான் கேட்கிறேன்.

ஊடகங்களில் செய்தி வந்தால் மட்டும் போதும் என்று எமது மக்களின் உரிமை யின் பெயரால் போலி வீர முழக்கமிடும் உறுப்பினர் முன்னாள் ஆசிரியர் சிறீதரன் அன்று புலிகளால் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு கொண்டு செல்லப்பட்டவர்.

தன்னை விடுவித்துக்கொள்ளுமாறு கெஞ்சி மன்றாடி, தனக்குப் பதிலாக தான் கல்வி கற்பிக்கும் அப்பாவி மக்களின் பிள்ளைகளான பள்ளி மாண வர்களை கட்டாய இராணுவப்பயிற்சிக்கு அள்ளிக்கொடுத்து அவர்களை பலியாக்கிவிட்டு தனது குடும்பத்தோடும், கொள்ளையடித்த பணத்தோடும் தப்பித்து வந்தவரே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள்.

இதற்கு, அவர் தப்பித்து வந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் வாகனசார-தியே சாட்சியாக இருக்கின்றார்.

இத்தகைய முதுகெலும்பில்லாத பேர்வழிகள் எந்த முகத்தோடு எமது மக்களின் உரிமை குறித்து வீரமுழக்கமிட முடியும்? என்று நான் கேட்கின்றேன்.

“வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால், தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே நீட்டிய ஈட்டியும் மட்டும் இருந்தால் போதாது. நான் கூறும் அறிவாயுதத்தை யும் ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று சோக்கிரட்டீஸ் அழைத்தது போல்,

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையை தீர்ப்பதற்கு வெற்று வீரப்பேச்சுக்களை கைவிட்டு,.. மதிநுட்ப சிந்தனைகளின் வழிநின்று நடைமுறை சாத்திய வழியில் செயற்படுவோம் வாருங்கள் என்று நான் சகல தமிழ் அரசியல் தலைமைகளை நோக்கியும் அறை கூவல் விடுத்திருந்தேன்.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து தொடங்கி, அதற்கு மேலும் தேவையான அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் எமது அரசியல் இலக்கை அடைவதே நடைமுறைச்சாத்தியம் என நான் கூறி வந்திருக்கின்றேன்.

**தமது சொந்த சலுகைகளுக்காக அரசாங்கத்தின் பின் கதவு தட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் தமது பிள்ளைகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களை அங்கிள் என்று உறவு முறை சொல்லிக் கொடுத்திருக்கிறார். ஆனாலும், தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக அதே சரவணபவன் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி அவர்களை ஒரு குற்ற வாளியாக காண்பித்து வருகின்றார். ஊடகங்களின் பார்வைக்கு இந்த தில்லு முல்லுகளும், திருகு தாளங்களும் தெரிந்திருந்தும் தெரியாதது போல் போவது ஏன் என்று தெரியவில்லை.**

ஒன்றுக்கும் உதவாத தீர்வு, உளுத்துப் போன தீர்வு, அரைகுறைத் தீர்வு, செத்த பிணம் என்று கூறி ஒதுக்கி வைத்தார்கள் இந்த தீர்வை.

13ஆவது திருத்தச்சட்டத்தை தும்புத்தடி யால் கூட தொட்டுப்பார்க்க மாட்டோம் என்று வீறாப்பு வீரம் பேசினார்கள்.

ஆனாலும், இறுதியாக இன்று எமது வழிமுறைய ஏற்று, நாம் கூறி வந்த அதே 13ஆவது திருத்தச்சட்டத்திற்குள் வந்து நின்றுதான் சுழன்று கொண்டிருக் கிறார்கள்.

எனது தீர்க்கதரிசனங்களும், அரசியல் தூரப்பார்வையுமே இன்று வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனாலும்,அன்றே தமிழ் கட்சித் தலைமை கள் எனது கருத்துக்களை ஏற்று வந்திருந்தால்,...

கொடிய அழிவு யுத்தம் முள்ளிவாய்க் கால் வரை எமது மக்களை அள்ளிச் சென்றிருக்காது.

அழிவுகளும், அவலங்களும், இழப்பு களும், இடப்பெயர்வுகளும் எமது மக் களுக்கு நடந்திருக்காது.

இன்று எல்லோருமே ஏற்றுக்கொண்டி ருக்கும் 13ஆவது திருத்தச்சட்டத்தை நாம் அன்றே வலியுறுத்தி வந்ததனால்,. பலத்த சவால்களை சந்தித்திருந்தோம். போட்டி அரசியல் கட்சிகளால் தூற் றப்பட்டோம், வசை பாடப்பட்டோம்.

ஆனாலும், போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரி எம்மேல் தூற்றுவார் தூற்றட்டும், நாம் செல்லும் வழி நேர்வழியாகட்டும் என்று எமது மக்களுக்காக துணிச்சலோடு இன்று வரை உழைத்துக்கொண்டிருக்கின்றோம்.

எமது மக்கள் பட்ட அவலங்களையும் துயரங்களையும் நினைத்துப்பார்க்கும் போது, எமது மக்களுக்காக நாம் சுமந்து நின்ற தூற்றுதல்களும், சவால் களும் எமக்கு சாதாரணமானவையே.

இனியும் எமது மக்களுக்காக நாம் எத்தனை தூற்றுதல்களையும் சந்திக்க தயாராகவே இருக்கின்றோம்.

நாம் எமது மக்களுக்காக வெளிப்படை யாகவே அரசுடன் கைகுலுக்கி நிற்கின்றோம். இது பதிவுத்திருமணம் போன்றது.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் அரசாங்கத்தின் பின் கதவு தட்டி குழைந்து, வளைந்து கூனிக்குறுகி நின்று, தமது சொந்த சலுகைகளைப் பெறுவதில் சுவை கண்டு வருகிறார்கள். அது கள்ளக்காதலைப் போன்றது.

தமது சொந்த சலுகைகளுக்காக அரசாங்கத்தின் பின் கதவு தட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் தமது பிள்ளைகளுக்கு ஜனா திபதி மகிந்த ராஜபக்ச அவர்களை

அங்கிள் என்று உறவு முறை சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும், தமிழ் மக்களின் வாக்கு களை அபகரிப்பதற்காக அதே சரவண பவன் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஜனா திபதி அவர்களை ஒரு குற்றவாளியாக காண்பித்து வருகின்றார்.

ஊடகங்களின் பார்வைக்கு இந்த தில்லு முல்லுகளும், திருகு தாளங்களும் தெரிந்திருந்தும் தெரியாதது போல் போவது ஏன் என்று தெரியவில்லை.

நாம் எமது சொந்த சலுகைகளுக்காக யாரிடமும் கையேந்தி நின்றதில்லை.

அவ்வாறு ஆட்சியாளர்களுக்கு சாமரம் வீசி சொந்த சலுகை பெற்றுக் கொண்ட வர்களின் சோரம் போன வரலாறுகளை வளர்ந்து வரும் இன்றைய இளைய ஊடகவியலாளர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமா ரணதுங்க அவர்களது ஆட்சியின் போது மீன்பிடி அமைச்சராக இன்றைய ஜனா திபதி இருந்தார். அப்போது, அரசின் பின் கதவு தட்டி, மீன்பிடி அமைச்சின் ஆலோசகராக சலுகையில் பதவி பெற்று தனது சொந்த வளங்களை மட்டும் பெருக்கிக்கொண்டவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான தொங்குதசை யான வரலாறு சகலருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

**சூளுரைத்தலும், சூடு கிளப்புதலும், உசுப்பேற்றுதலும் எமது மக்களை சுடுகாடு நோக்கி கொண்டு சென்றதே ஒழிய, சுதந்திரத்தையோ அல்லது சோற்றையோ எமது மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.**

திருமலையில் தமிழ் மக்களின் நிலங்களை திருட்டுத்தனமாக பிடித்து வைத்திருக்கும் தலைவர் சம்பந்தன் ஐயா அவர்கள், தமிழ் மக்களின் நிலங்கள் மீட்கப்பட வேண்டும் என்று குரல் கொடுப்பது போல் நடிக்கின்றார்.

சூளுரைத்தலும், சூடு கிளப்புதலும், உசுப்பேற்றுதலும் எமது மக்களை சுடுகாடு நோக்கி கொண்டு சென்றதே ஒழிய, சுதந்திரத்தையோ அல்லது சோற்றையோ எமது மக்களுக்கு

பெற்றுக்கொடுத்திருக்கவில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் எது இங்கு நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அதுவே இங்கு நடந்து கொண்டிருப்பதாக இலங்கையிலும், இந்தியாவிலும், புலம் பெயர் நாடுகளிலும் நின்று கூக்குரல் இடுகின்றார்கள்.

எங்காவது ஒரு இடத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை எரிந்து கொண்டிருந்தால் அங்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்ணை ஊற்றி அதை எரிய வைக்கிறது.

ஆனால் நாங்களோ எரிந்து கொண்டி ருக்கும் பிரச்சினை மீது தண்ணீர் ஊற்றி அதை தணிய வைக்க முயல்கின்றோம்.

இதுதான் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமக்கும் இடையிலான வேறுபாடு.

கடந்த கால இருண்ட வரலாற்றில் இருந்து நிமிர்ந்தெழுந்து வரும் எமது மக்களை நிரந்தர தீர்வு நோக்கி அழைத்து செல்ல வேண்டிய தார்மீக பொறுப்பு ஊடகங்களுக்கும் உண்டு.

ஊடகத்துறை என்பது தொழில் ரீதி யானது மட்டுமல்ல, அது ஒரு மக்கள் சமூகத்தின் இலட்சியக்கனி பறிக்கும் உன்னத துறையுமாகும்.

தங்கத்தால் செய்யப்பட்ட கத்தி என்ப தற்காக அது வயிற்றிலே குத்தப்படு வதை அனுமதிக்க முடியாது. அது போல், தமிழ் தமிழ் என்று போலி முழக்கமிடுவோர் தமிழ் மக்களின் உரிமை களை தீராப்பிரச்சினையாக நீடித்துச் செல்லும் கபட நாடகங்களையும் ஊடகங்கள்

ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

ஊடக நண்பர்களே!.. உங்களில் பலரை நீங்கள் இழந்திருக்கிறீர்கள்.

பாவம் ஒரு பக்கம், பழி இன்னொரு பக்கம்.

இப்படி அடுத்தவன் மீது அனாவசிய மாக பழி சுமத்துவதால் உண்மையான கொலைக்குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள்.

உனது கருத்தை நான் ஏற்கவில்லை. ஆனாலும் நீ உன் கருத்தைச் சொல்லும் உனது சுதந்திரத்திற்காக நான் உயிரைக்கொடுத்தும் போராடுவேன், இது வரை போராடியுமிருக்கிறேன்.

வெளிவராத உண்மைகளும் இல்லை.

அறியப்படாத மர்மங்களும் இல்லை.

இதுதான் வரலாறு.

# ஐ.நா.மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கைக்கெதிராக போலி சாட்சியங்கள்

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கெதிராக முன்வைப்பதற்காக போலியான சாட்சியங்கள் தயாராவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுவிடயத்தில் தலைமைச் சபையான ஐக்கிய நாடுகள் சபை கூட பக்கச்சார்பாகவே செயற்படுகிறது என்றும் அவர் சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் யுத்தம் முடிவடைந்து விட்டாலும் பிரச்சினைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அணமையில் வன்னியில் வைத்து கிருஷ்ணராசா என்பவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் என கூறப்படும் ஒரு தொகை மக்களின் கையொப்பம் அடங்கிய வெற்றுக் காகிதங்கள் கைப்பற்றப்பட்டன.

அத்தோடு, சுமார் 400 பேரின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் அவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலும், இவருடைய தொலைபேசி மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுடன் நெருங்கிய தொடர்பிலுள்ள சண் மாஸ்டர் என்ற நபருக்கு 67 தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது இலங்கைக்கு எதிரான சதி வலையொன்று பின்னப்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

ஐ.நா விசாரணையில் சாட்சியமளிப்பதற்கான திகதி ஒக்ரோபர் 30 இல் முடிவடைந்துள்ள போதிலும், தேவையேற்படின் சில முக்கிய சாட்சியங்களை பெற்றுக் கொள் வோம் என ஐ.நா. அறிவித்துள்ளது.

இது மிகவும் பிழையான தொரு செயற்பாடாகும். அடுத்த வருடம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது இலங்கைக்கெதிராக செயற்பட வேண்டும் என ஐ.நா. இப்போதிலருந்தே செயற்பட்டு வருகின்றது.

அதற்கான போலி ஆவணங்களை சேகரிக்கும் முயற்சியாகவே கிருஷ்ணராசாவின் செயற்பாடுகள் காணப்படுவதாகவும் எம்மால் கருதப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் நிகழ்வில் காணாமற் போன அதிபர்



ராஜகிரிய ஹேவாவிதாரன மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வில் அப்பாடசாலையின் அதிபர் கலந்துகொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலையில் நடைபெறவிருந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு முந்திய தினம் இரவு அதிபர் காணாமற் போயுள்ளதாக அதிபரின் சகோதரர் ஒருவரினால் கொட்டாவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

இப்பாடசாலையில் மகிந்தோதய ஆய்வு நிலையம் ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் திறக்கப்படவிருந்தது. இதற்காக வேண்டி அதிபர் ஏற்பாட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் 18 ஆம் திகதி இரவு பாடசாலையிலிருந்து சென்றவரே காணாமற் போயுள்ளார். இப்பாடசாலையின் அதிபர் சீ. நாகசிங்க என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்பாடசாலை நிகழ்வு பிரதி அதிபர் உட்பட ஆசிரியர்கள் சிலரின் தலைமையில் நடந்தேறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதிபரைத் தேடும் பணியில் பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது,

# சஜித்திற்கு ஆதரவு கரு திடீர் அறிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க.வின் வேட்பாளராக சஜித் பிரேமதாச போட்டியிடும் பட்சத்தில், அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக ஐதே.க. தலைமைத்து வச் சபைத் தலைவர் கரு ஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.வின் வேட்பாளர் தெரிவு இன்று இறுதிக்கட்டத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இன்றைய கூட்டத்தில் சகலரும் ஏகமனதாக ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை தெரிவு செய்தால், தான் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# மகிந்தவே வேட்பாளர் சுதந்திர கட்சி அறிவிப்பு

தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்சவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கான தீர்மானம் நேற்று முன்தினம் இரவு ஏகமனதாக எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் கூட்டத்தின் போது கட்சியின் சிரேஷ்ட தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த ராஜபக்சவின பெயரை பிரேரித்தார். அதனை மற்றொரு ஒரு சிரேஸ்ட தலைவரான டி எம் ஜெயரத்ன வழிமொழிந்தார்.

# இலங்கையில் பயங்கரவாதம் இடமளிக்காது இராணுவம்

## பிரிகேடியர் வணிகசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதம் ஏற்படுவதற்கான நிலைமை உள்ளதாக சர்வதேச ரீதியில் பல ஊடகங்கள் பிழையான பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. இவை முற்றிலும் தவறான கருத்துக்கள். இனி இலங்கையில் ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு இராணுவம் இடமளிக்காது என இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடகமைய பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.





பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய் தியாளர சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் பயங்கரவாதம மீண்டு நிலவுவதற்கான நிலைமை உள்ளதாக சர்வதேச ஊடகங்கள சில தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இலங்கையில் மட்டுமன்றி 13 நாடுகளில் இந்த பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதாக அந்த செய்திகளில் கூறப்படுகின்ற போதும் இலங்கையில் அவ்வாறான ஒரு நிலைமை இல்லை.

கடந்த 3 தசாப்த காலமாக நாட்டில் நிலவிய பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, கடந்த 5 ஆண்டுகளாக நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும் ஒற்றுமைக்கும் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாட்டிலிருந்து ஆயுதரீதியிலான பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் வெளிநாடுகளில் வாழும் சிலரால் பிரிவினைவாதம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நாட்டில் இன்னுமொரு நாட்டை உருவாக்கும் முயற்சியில் வெளிநாடுகளிலுள்ள சில குழுக்கள் செயற்படுகின்றன.

எனினும் மீண்டும் இலங்கையில் பயங்கரவாதம் தலைதூககுவதற்கோ, மக்களின் சுதந்திரத்தை பறிக்கும் நடவடிக்கைகளுக்கோ இராணுவம் ஒருபோதும இடம்தராது என்றார்.

# 80 வீத மீள்குடியேற்றம் வடக்கு,கிழக்கில் பூர்த்தி

## என்கிறார் அமைச்சர் குணரட்ன

வடக்கு, கிழக்கு பகுதிகளில் 80 சதவீத மீள்குடியேற்றப் பணிகள் இதுவரை பூர்த்தியடைந்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

2015 முதல் 2017 வரையான மீள்குடி யேற்றத் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் 54 ஆயிரம் வீடுகளைக் கட்டி முடிக்கவும், உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்திசெய்யவும் 25 ஆயிரத்து 145 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான வரவு - செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகில் யுத்தம் இடம்பெற்ற எந்தவொரு நாட்டிலும் இலங்கையைப் போல மீள் குடியேற்றம் இடம்பெறவில்லை. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது முதல் இதுவரையான காலப் பகுதியில் 80 சதவீத மீள்குடி யேற்றப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

2015ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றத் திட்டத்தில் 54 ஆயிரத்து 408 வீடுகளைக் கட்டி முடிக்கவும், உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துமுடித்து மீள்குடியமர்த்தவும் 25 ஆயிரத்து 145 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் செட்டிகுளம் முகாமில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு 3 வேளையும் வயிறு நிறைய உணவு வழங்கி,



அவர்களைக் குடியமர்த்திய அரசு தான் இந்த அரசு. தற்காலிக மற்றும் இடைக்கால நிரந்தரக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்தோம்

இதேவேளை, இங்கு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மங்களகம'வில் சிங்களக் குடியேற்றம் இடம் பெறுகின்றது எனக் கூறினார். அது தவறு. மங்கள கம என்பது சிங்களக் கிராமமாகும். அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்ட சிங்களவர்கள் மீண்டும் அங்கு குடியமரத்தப்படுகின்றனர்" - என்றார்.

# நிரந்தர நியமனம்

புகையிரத திணைக்களத்தில் தற்காலிக மற்றும் மேலதிக ஊழியர்களாக கடமைபுரிந்த 2,800 பேருக்கு நிரந்த நியமனம் பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளர் விஜய அமரதுங்க தெரிவித்துள்ளார்.

புகையிரத கணனி மற்றும் காரியாலய உதவியாளர்கள் பதவிகளுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# கம்மன்பிலவின் அமைச்சிற்கு மும்முனைப் போட்டி தீவிரம்

(கொழும்பு)

மேல்மாகாண விவசாய மற்றும் சுற்றாடல்துறை அமைச்சுப் பொறுப்பில் இருந்து உதய கம்மன்பில ராஜினாமாச் செய்ததையடுத்து, அவ்வமைச்சைப் பெறுவதற்காக கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆளுந்தரப்பின் மூன்று மேல்மாகாண உறுப்பினர்கள் போட்டி போடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெக்டர் பெத்கமகே, காமினி திலகசிறி, சுனில் ஜயமினி ஆகியோரே இவ் அமைச்சுப் பதவிக்காக, ஆளாளுக்கு மல்லுக் கட்டுவதாகவும், இதன் பின்னணியில் சில அமைச்சர்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# இ.போ.ச.புதிய பஸ் சேவைகள்
# யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பம்

## யாழ்.முகாமையாளர் குலபால செல்வம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பொத்துவில், கண்டி, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கான புதிய பஸ் சேவையை 15 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம், நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் இருந்து பொத்துவிலுக்கு இரவு 8.30 மணிக்கும் பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மாலை 6.30 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிக்கு பி.ப 2.45 மணிக்கும் கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பிற்பகல் 2.30 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு பிற்பகல் 1.30 மணிக்கும் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மாலை 5 மணிக்கும் இந்த புதிய பேருந்து சேவைகள் இடம்பெறும்

அத்துடன் குறிகாட்டுவானில் இருந்து கொழும்பிற்கு இரவு 9 மணிக்கும், கொழும்பில் இருந்து குறிகாட்டுவானிற்கு இரவு 10 மணிக்கும் பஸ் சேவை இடம் பெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சத்திய சாயி பாபா தினம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 89 ஆவது அவதார தின நிகழ்வுகள் பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் மேற்கொண்டுள்ளது. நிகழ்வுகள் சேவாநிலையத் தலைவர் ஆர்.இராசநாதன் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இவ் அவதார நிகழ்வுகளின் போது ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையங்களின் முன்னாள் இணைப்புக் குழுத்தலைவரும், இளைப்பாறிய மாவட்ட நீதிபதியுமான ஆர்.வசந்தசேனன் சிறப்புரையாற்றுவார். அன்றைய தினம் அதிகாலை 4.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். 8 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றம் பாத, பூசை, வேதபாராயணமும் அதனைத் தொடர்ந்து வசந்த சேனனின் சிறப்புரை இடம்பெறும்.

நிலைய இளைஞர்களின் இன்னிசை, பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் 'சர்வதர்மப்பிரியன் சாயி' வீடியோப்படக்காட்சி, சாயிபஜனை, நாமஸ் மரணை திருவூஞ்சல், மகா மங்கள ஆரத்தி மகேஸ்வர பூசை ஆகிய நிகழ்வுகள் நடைபெறும்.

சகல பக்த அடியார்களும் சுவாமியின் அவதார தின நிகழ்வுகளில் முழுமையாகப் பங்குகொண்டு பகவானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு பருத்தித்துறை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய நிர்வாகிகள் கேட்டுள்ளனர். (01)

## வீதிகளில் வெள்ளநீர்த்தேக்கம் அசௌகரியமடையும் மக்கள்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் சந்தைக்குச் செல்லும் பாதைகள் மழை நீரால் நிரம்பி காட்சியளிக்கின்றன.

இதனால் சந்தைக்குச் செல்லும் பொது மக்கள் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொள் வதாக தெரிவிக்கின்றனர்.

சந்தையின் வெளிப்புறங்களான தனியார் கடைத்தொகுதி, ஆட்டோ தரிப்பிடம், மத்திய பேருந்து நிலையம் என்பனவற்றிலும் நீர்தேங்கி நிற்பதாகவும், மழை நீர் பாய்ந்து செல்லக்கூடிய வடிகால் அமைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இச்சந்தைக்கு வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி முதலான பகுதிகளில் இருந்து பெருமளவான பொதுமக்கள் வியாபார நடவடிக்கைக்காக பொருட்களை கொள்வனவு செய்ய வந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## முரசின் இன்றைய பலன்



(21.11.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 05 ஆம் திகதி.
சதுர்த்தசி / சித்தம்.
சுவாதி நட்சத்திரம் பிற்பகல் 01.33 வரை. பின் விசாகம்.
இராகு காலம் 10.40 - 12.10 வரை. சுபநேரம் 06.10 - 07.14 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | யோகாசனம் பயில எண்ணுதல், சகஊழியர்களுடன் சகஜ நிலை ஏற்படுத்தல். |
| ரிஷபம் | முற்றாக்கும் நிலைக்கு வந்த விவாகம் தடைப்படல். |
| மிதுனம் | பாதுகாப்பில் கூடிய கவனம் எடுத்தமையினால் திருட்டு போகாது விடல். |
| கடகம் | வாகனத்தை ஒட்டிப் பழக முற்பட்டவேளை விபத்தினின்றும் தப்புதல், நடக்குமென எதிர்பார்த்த நிகழ்வு காலை வாரிவிட்டதால் கவலையுறல். |
| சிம்மம் | கணக்கில் வழுகாணப்பட்டதினால் வாடிக்கையை முறித்துக் கொள்ளல், சந்தோஷத்தை தக்க வைத்தல். |
| கன்னி | புதிய மனைகோலத்திட்டமிடல், போதைவஸ்து பாவனையை நிறுத்துதல். |
| துலாம் | புதிய முயற்சி ஆரம்பிப்பதை தற்காலிகமாகக் கைவிடல். |
| விருச்சிகம் | பிள்ளையை நினைத்து மனக்கிலேசமடைதல், நோய்நொடி ஏற்பட வாய்ப்பு உண்டு, எதிர்பாராத சந்தோஷம் ஏற்படும். |
| தனுசு | பொறுப்புக்களைப் பிறரிடம் ஒப்படைத்தாலும் கவனம் தேவை, சுபகாரியத்தை நடாத்த பணத்திற்கு கையேந்தும் நிலை. |
| மகரம் | கல்வி முன்னேற்றம் கருதி பணம் புரட்ட எண்ணுதல். |
| கும்பம் | சட்டவிரோத பொருட்களைக் கொண்டு செல்ல முயன்றவேளை பிழபடல், தேக சௌகரியம் பாதிப்படைதல். |
| மீனம் | வியாபாரம் தொடர்பில் சிக்கல் ஏற்படல், நம்பகத்தன்மை அற்றுப்போவதால் வெளியூர் திருமணத்தைக்கைவிடல். |

## முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் வளவாளர்களுக்கான இருநாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் வளவாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜலட்சுமி ரமேஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பொ.வாகீசன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இப்பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண உத்தியோகத்தர்கள் மேலும் சிறந்த பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் விதத்தில் பயிற்சிகள் வடிவமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். அத்துடன் இப் பயிற்சிப்பட்டறை மூலம் பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், வளவாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

## பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

(கரவெட்டி)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கரவெட்டி யாக்கரு சந்தி, விராலி மடம் முதலான பகுதிகளில் பார்த்தீனிய செடி வளரத் தொடங்கியுள்ளது.


முன்னர் இப்பகுதியில் பார்த்தீனியச் செடிகள் இல்லையென்றும் தற்போது கால்நடைகள் மூலமே இப்பகுதிகளில் இச்செடிகள் வளரத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கும் மக்கள் இதனை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இவற்றை ஏனைய இடங்களிற்கு பரவாமல் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## சிவலிங்கத்தின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழாசிரியராகவும் உபஅதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ள அச்சுவேலியூர் சி.சிவலிங்கத்தின் மணிவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இவர் அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவிலின் ஆலய தொண்டராகவும் சிறந்த தமிழாசானாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. (90)





யாழ்.பல்கலைக் கழக 3 ஆம் வருட ஊடககற்கைகள் பிரிவு மாணவர்களால் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்ட 'அடையாளம்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வின் போது. (48)

## மைலோ கிண்ண கால்பந்தாட்டம்

# காலிறுதி ஆட்டங்கள் துரையப்பாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்துத் தொடரின் முதன் மைச் சுற்றின் காலிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடை பெறவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய் துள்ள மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடர் இரண்டாவது ஆண்டாக நடாத்தப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்ட கால்ப்பந்தாட்ட வீரர்களின் திறமை யினை தேசிய ரீதியில் கட்டியெழுப்பும் விதமாக ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டித் தொடர் யாழ்ப்பாணம், தீவகம், வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த அணிகளுக்கிடையில் நான்கு கட்டங் களாக போட்டிகள் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிர தேசங்களிலிருந்தும் இரு அணிகள் முதன்மைச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டன.

இதன்படி வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடை யிலான தகுதிகாண் போட்டிகள் நேற்று முன்தினமும், நேற்றும் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி யூத் அணியும் பொலிகை விண்மீன் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் விண்மீன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் கொலின்ஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் வதிரி டையமன்ஸ் அணியும் இமையாணன் மத்தி அணியும் மோதின. இதில் டையமன்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நான்காவது காலிறுதியில் புத்தூர் கலைமதி அணி யும் சென் சேவியர் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றுக் கொண்ட தால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக் கப்பட்டது. இதில் கலைமதி அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


நேற்றைய தினம் நடைபெற்ற முதலாவது அரை யிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி யும் டையமனஸ் அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலத்துடன் முட்டி மோதின. 30ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் சாந்தன், 33 ஆவது நிமிடத்தில் டையமன்ஸ் அணியின் சுசி ஆகியோர் கோல்களை அடித்தனர். வெற்றிக் கோலைப் போட்டுக்கொள்ள இரு அணிகளும் முனைப்புடன் செயற்பட்டபோதிலும் இறுதி வரை முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நவஜீவன்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கலைமதி அணி கோல் மழை பொழிந்தது. 30ஆவது நிமிடத்தில் அதி, 37ஆவது நிமிடத்தில் சந்துரு, 42ஆவது நிமிடத்தில் ரவிசங்கர் ஆகியோர் கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். முடிவில் கலைமதி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் முதன்மைச் சுற்றின் காலிறுதிப் போட்டிகள் துரையப்பா விளையாட்டு அரங் கில் நடைபெறவுள்ளன. இதில் தீவகப் பிரதேசத்தி லிருந்து வேலணை துறையூர் ஐயனார், மெலிஞ்சி முனை இருதயராஜா, யாழ்ப்பாணம் பிரதேசத்திலிருந்து நாவாந்துறை சென். மேரிஸ், குருநகர் பாடுமீன், வலி காமம் பிரதேசத்திலிருந்து தெல்லிப்பளை நாமகள், நவாலி சென். பீற்றர்ஸ், வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ், நவிண்டில் கலைமதி அணி கள் முதன்மைச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. முதன்மைச் சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ள அணிகளுக்கான காலிறுதி ஆட்டங்கள் இன்று காலை யாழ். துரையப்பா விளை யாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன. அத்துடன் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை நடைபெறவுள்ள அதேவேளை, இறுதிப் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எஸ்.பி.,93, 48,21)



நாவாந்துறை சென். மேரிஸ்



மெலிஞ்சிமுனை இருதயராஜா



நவாலி சென். பீற்றர்ஸ்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ்



நவிண்டில் கலைமதி



வேலணை துறையூர் ஐயனார்



தெல்லிப்பளை நாமகள்



குருநகர் பாடுமீன்

## விலக வேண்டும் கிளார்க் ஒரு நாள் தொடரிலிருந்து

அடிக்கடி காயத்தால் அவதிப்பட்டு வரும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் 2015ஆம் ஆண்டு உலக கிண்ண தொடருக்குப் பின் ஒரு நாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்று அவுஸ் ரேலிய முன்னாள் கப்டன் அலன் போர்டர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட காலம் நீடிக்க வேண்டும் என்று கிளார்க் விரும்பினால் 2015ஆம் ஆண்டு உலக கோப்பை தொடருக்குப் பின் அவர் ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு முழுக்கு போட வேண்டும். உலக கோப்பையில் என்ன நடந்தாலும், அடுத்த சில ஆண்டுகளுக்கு டெஸ்ட் வீரராக இருப்பதில் மட்டுமே அவர் கவனம் செலுத்த வேண்டும். அவரது உடல் ஒத்துழைக்கும் பட்சத் தில், டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித் துள்ள அவுஸ்ரேலிய வீரர்களின் பட்டிய லில் கிளார்க்கால் முதலிடத்திற்கு முன் னேற முடியும் என்றார்.

## ரோகித்தின் சாதனையை முறியடிப்பது கடினம்

இலங்கைக்கு எதிராக ரோகித் சர்மா பெற்றுக்கொண்ட 264 ஓட்டங்கள் என்ற ஒருநாள் கிரிக்கெட் உலக சாதனையை முறியடிப்பது கடினம் என்று மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் கப்டன் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

மான்செஸ்டர் மைதானத்தில் விவி யன் ரிச்சர்ட்ஸ் எடுத்த 189 ஓட்டங்கள் என்ற சாதனையுடன் கிரிக்கெட்டில் வளர்ந்தவர்கள் நாங்கள். அன்று அவர் பந்து வீச்சை எவ்வாறு ஆதிக்கம் செலுத்தினார் என்பது பற்றி நாங்கள் போதிக்கப்பட்டோம். அப்போது இந்த ஓட்ட எண்ணிக்கைதான் உலக சாதனை. சில ஆண்டுகளுக்கு முறியடிக்க முடியா மல் நிலைபெற்றது.

அப்போதெல்லாம் 200 ஓட்டங்களைப் பெற முடியும் என்றே நான் உணர்ந்தேன். ஆனால், இப்போது ரோகித் சர்மாவின் 264 ஓட்டங்கள் என்ற உலகசாதனை இப்போதைக்கு எட்ட முடியாத ஒன்று என்றே என்னை நினைக்கத் தூ ண்டுகிறது. இது மிகவும் விதிவிலக்கான அபாரமான ஆட்டத்திறன், இவ்வளவு ஓட்ட எண்ணிக்கைக்குப் பின்னர் அவர் ஆட்டமிழந்திருக்கிறார். இது சிறப்பான இனிங்ஸ். இதனைக் கடந்து செல்வது மிக மிகக் கடினமே.

அன்று ரோகித் 200 ஓட்டங்களை எடுத்த போது ஒருநாள் கிரிக்கெட்டில் இருமுறை இரட்டைச் சதம் என்று ஆச் சரியமடைந்தேன். ஆனால் சாத்தியமில் லாத ஒரு அளவுக்கு அன்று அவரது ஓட்ட எண்ணிக்கை செல்லும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

என்னிடம் அடிக்கடி கேட்கப்படுகிறது, டெஸ்ட் கிரிக்கெட்டில் என்னுடைய 400 ஓட்டங்கள் சாதனை முறியடிக்கப்படுமா என்று. இதற்கு ஆம் என்றே கூறுவேன். ருவென்ரி-20 கிரிக்கெட்டின் தாக்கம் அனைத்து கிரிக்கெட் வடிவங்களிலும் பாயும் நிலையில், கிறிஸ் கெய்ல், ஹோலி போன்றவர்கள் ஆடும் விதத் தைப் பார்க்கும் போது, ஒரு நல்ல துடுப்பாட்ட ஆடுகளத்தில் இவர்களைப் போன்ற வீரர்கள் 2 நாட்கள் நிற்க முடிந்தால் எதுவும் சாத்தியமே.

ருவென்ரி-20 கிரிக்கெட் வீரர்களின் தன்னம்பிக்கையை பெரிய அளவுக்கு வளர்த்துள்ளது என்றே நான் கருது கிறேன் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.






வடபகுதியிலுள்ள இராணுவத்தினரின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, முல்லைத்தீவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டயஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், போட்டி நிகழ்வையும் காணலாம்.

## ஐ.ஓ.சி.யின் சீர்திருத்தும் பல நகரங்களில் போட்டிகள்

ஒரே நகரத்தில் நடாத்துவதற்கு பதிலாக பல நகரங்களிலும் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் வகையிலான சீர்திருத்தங்களை மேற்கொள்ள சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஓ.சி.) முடிவு செய்துள்ளது.

இது குறித்த 40 பரிந்துரைகளை ஐ.ஓ.சி. தலைவர் தோமஸ் பொச் அளித்துள்ளார்.

இப்போது ஒலிம்பிக் போட்டிகள் ஒரே நகரில் நடாத்துவதற்கே அனுமதிக்கப்படுகின்றன. இனி ஒரு நாட்டின் பல நகரங்களில் மட்டுமல்ல, அருகருகே உள்ள நாடுகள்கூட போட்டியை நடாத்த அனுமதி பெற முடியும்.

கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் இப்போது 28 விளையாட்டுகளே அனுமதிக்கப்படுகின்றன. இந்த எண்ணிக்கையை உயர்த்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

போட்டி நடாத்தும் நாடு ஓரிரு விளையாட்டுக்களைச் சேர்த்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படும்.

மொனாகோவில் டிசம்பர் 8, 9ஆம் திகதிகளில் நடைபெறும் ஐ.ஓ.சி. சிறப்புக் கூட்டத்தில் நடைபெறும் வாக்கெடுப்பில் இந்தப் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆளுநர் வெற்றிக் கிண்ண கால்பந்து

## பிறைட்ஸ்ரார், யூனியன்ஸ், அன்ரனீஸ் இரண்டாவது சுற்றுக்கு முன்னேற்றம்

(மானிப்பாய்)

ஆளுநர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதல் சுற்றில் விளான் அன்ரனீஸ், பண்டத்தரிப்பு பிறைட் ஸ்ரார், தெல்லிப்பளை யூனியன்ஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான ஆளுநர் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் முதன்மை சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மூன்று போட்டிகள் நடைபெற்றன. இதன் படி முதல் போட்டியில் அராலி திருமகள் அணியும் விளான் அன்ரனீஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் விளான் அன்ரனீஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் பண்டத்தரிப்பு பிறைட்ஸ்ரார் அணியும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதின. இதில் பிறைட்ஸ்ரார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் தெல்லிப்பளை யூனியன்ஸ் மற்றும் விளான் அன்ரனீஸ் அணிகள் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. ஏனைய ஆட்டங்கள் கால நிலையைக் கருத்திற்கொண்டு நடாத்தப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48, 93)

## சாதனையை நெருங்கும் அம்லா



அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சதம் விளாசிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அம்லா குறைந்த இனிங்ஸ்களில் 5 ஆயிரம் ஓட்டங்களைப் பதிவு செய்யவுள்ளார்.

101 ஒரு நாள் போட்டிகளில் பங்குகொண்ட அம்லா 98 இனிங்ஸ்களில் 4910 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 17 சதங்களை அவர் விளாசியுள்ளார். இதன் மூலம் வெகுவிரைவில் 5 ஆயிரம் ஓட்டங்களை குறைந்த இனிங்ஸ்களில் பெற்று சாதனை படைக்கவுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ரிச்சர்ட்ஸ் மற்றும் இந்தியாவின் ஹோலி ஆகியோர் குறைந்த இனிங்ஸ்களில் (114 இனிங்ஸ்களில் 5,000) 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் என்ற சாதனையைப் புரிந்துள்ளனர். ஆனால், ரிச்சர்ட்ஸ் 126 போட்டிகளிலும், ஹோலி 120 போட்டிகளிலும் 5,000 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது போட்டியில் 73 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது. கான்பராவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரோன் பிஞ்ச் 109, டேவிட் வோர்னர் 53, வட்சன் 40, எம். மார்ஷ் 22, ஸ்ரீபன் ஸ்மித் 73 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 330 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 44.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அம்லா 102, குயின்ரன் டிகொக் 47, டிவில்லியர்ஸ் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீசசில் ஸ்டார்க் நான்கு, ஹேசல்வுட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 73 ஓட்டங்களால் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரீபன் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி இன்று மெல்போர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஈடேறுமா மோடியின் ஆசை?

அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் அவுஸ்ரேலியாவும் விளையாடும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற நரேந்திர மோடி, அதன் பின் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ள 161 ஆண்டுகள் பழமை வ்வாய்ந்த புகழ் பெற்ற மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்துக்கு அவர் சென்றார். அவருடன் அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அப்போட், கிரிக்கெட் வீரர்கள் அலன் போர்டர், சுனில் காவஸ்கர், கபில்தேவ், டீன் ஜோன்ஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த நிகழ்வின்போது பிரதமர் மோடி பேசியதாவது: புகழ்பெற்ற மெல்போர்ன் மைதானத்தில் நின்றிருப்பது பிரெட் லீக்கும், மெக்ராத்துக்கும் எதிராக சதத்தை நெருங்கிக் கொண்டிருப்பது போன்ற உணர்வைத் தருகிறது. இந்த நினைவு என்றும் என்னுள் நீடித்து நிற்கும். அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தை நடாத்த தகுதியான இடமாக மெல்போர்ன் மைதானம் உள்ளது. அந்தப் போட்டியில் இந்தியாவும், அவுஸ்ரேலியாவும் விளையாடும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னேறிய வீராங்கனையாக கனடாவின் பௌச்சார்ட் தெரிவு



பெண்கள் ரென்னிஸ் சங்கத்தின் சார்பில், இந்த ஆண்டில் மிகவும் முன்னேறிய வீராங்கனையாக கனடாவின் 20 வயதான பௌச்சார்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். விம்பிள்டனில் இறுதிப்போட்டி வரை முன்னேறிய பௌச்சார்ட் உலக பெண்கள் சம்பியன்ஷிப் போட்டிக்கும் முதல் முறையாக தகுதி பெற்று சாதனை படைத்தார். எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி. ஒவ்வொரு நாளும் நான் முன்னேற்றம் காண முயற்சிக்கிறேன். ஏற்கனவே சில புதிய இலக்குகளை நிர்ணயித்துள்ளேன். அவற்றை நோக்கி அடுத்த ஆண்டில் பயணிப்பேன் என்று பௌச்சார்ட் கூறினார்.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் தெருவெளி ஆற்றுகை – ஒரு பார்வை

- மஹரன் -



அறிவுடைய சமுதாயம் ஒன்றின் உருவாக்கத்திற்கு பல்துறைப்பட்ட வாசிப்புத்தேடல் அவசியமாகின்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. மனிதனானவன் தன்னுடைய அறிவினை பெருக்கிக் கொள்வதற்கான ஊடகமாக வாசிப்பினை பயன்படுத்துகின்றான்.

வாசிப்பானது இளம் சமுதா யத்தினரிடையே அருகிச் செல்கின்றது என்ற குற்றச்சாட்டு அனைவராலும் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு அருகிச் செல்கின்ற வாசிப்புப் பழக்கத்தினை இளம் சமுதாயத்தினரிடையே ஊட்டவும் அறிவு நிறைந்த சமுதாயத்தினை உருவாக்குகின்றதுமான பணிகளினை நூலகங்கள் ஆற்றி வருகின்றன. வருடாந்தம் நூலகங்களினை அடிப்படையாகக் கொண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சி நிரலானது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வாசிப்பு மாதத்தின் செயற்றிட்டத்தில், இணுவில் பொது நூலகத்தினால் வாசிப்புப் பழக்கத்தினை இளம் சமுதாயத்தினரிடையே ஊக்குவிக்கும் செயற்பாடாக தெரு வெளி ஆற்றுகையானது யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்நிலையாக ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களினால் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" (வாசிப்பால் நாம் உயர்வோம்) என்னும் தலைப்பிலான இந்த தெரு வெளி ஆற்றுகை நடத்தப்பட்டு வருகின்றது.

வாசிப்பின் அவசியத்தினை உணர்த்தும் வகையில் யாழ் மாவட்டத்தின் பாட-சாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் பொது இடங்கள் சனசமூக நிலையங்கள் ஆலய வீதிகள் போன்றவற்றில் இவ் ஆற்றுகையானது இடம்பெற்று வருகின்றது.

இத்தெரு வெளி ஆற்றுகை நெறியாள்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். ஆற்றுகையாளர்களாக தயாநிசன், லிவின்சன், கவிராஜ், பிரசாந்தன், லோன்சன், மகிந்தன், தபேன்சன், உசாந்தன், திலக்சன், நிதர்சன் போன்றோர் நடித்துள்ளனர்.

இத்தெருவெளி ஆற்றுகையானது பெரும்பாலும் பாடசாலை மாணவர்களையே இலக்குப் பார்வையாளராகக் கொண்டு யாழ் மாவட்டத்தின் பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் சனசமூக நிலையங்கள் பொது இடங்கள் என 300 இற்கு மேற்பட்ட ஆற்றுகைகளாக நிகழ்த்தப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் நிகழ்த்தப்படுகின்றமை சிறப்பிற்குரியது.

வாசிப்பின் அவசியம், நூலகங்களின் பயன்பாடு என்பன ஆற்றுகைக்கு ஊடாக சொல்லப்படுகின்றது. பாடலும் ஆடலும் நகைச்சுவை உணர்விற்கு ஊடாகவும் வாசிப்பின் அவசியம் பற்றிய கருத்தினை பிரச்சாரப்படுத்தியிருந்தது.

எம்மிடையே காணப்படுகின்ற கல்வி நடைமுறையின் குறைபாடு காரணமாக பரீட்சை மையக் கற்கை நெறியே காணப்படுகின்றது. இது ஒரு வகையில் திணிப்பு சார் கல்விச்செயற்பாடாக காணப்படுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்களாலும் வீடுகளில் பெற்றோர்களாலும் கல்வியானது திணிக்கப்படுகின்றது. இதன் காரணமாக சுயசிந்தனை, சுய ஆளுமையற்ற புதிய தேடலை மேற்கொள்ளாத சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது

இத்தகைய கல்வி நடைமுறைகளுக்கு மேலாக சுயதேடல் புத்தாக்க சிந்தனையுடைய மாணவர்களாக எமது இளம் தலைமுறையினர் உருவாகுவதற்கு வாசிப்புப் பழக்கமானது அவசியப்படுகின்றது. வாசிப்பின் - நூலகப் பயன்பாட்டின் ஊடாக சுய சிந்தனை சுய ஆளுமையுள்ள சமூகம் ஒன்றினை உருவாக்கமுடியும் என்கின்ற செய்தியினைச் சொல்வதாக இத்தெருவெளி ஆற்றுகை அமைகின்றது. இது அனைத்துத் தரப்பினரிடையேயும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. நகைச்சுவை ஊடாக சொல்லவந்த விடயத்தினை பார்வையாளர்களுக்கு இலகுவாக எடுத்துச்சொன்ன முறைமை இவ் ஆற்றுகைக்கு பலம் சேர்க்கின்றது.

சமூகத்தின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலும் சமூகப்பணியினை மேற்கொள்வதிலும் சிறந்த ஊடகமாக நாடகக்கலை விளங்குகின்றது. பார்வையாளர்களை நாடிச்சென்று தனது வடிவத்தின் ஊடாக கருத்தினை வெளிப்படுத்துகின்ற ஊடகமாக தெரு வெளி நாடகங்கள் விளங்குகின்றன. இத் தெரு வெளி ஆற்றுகை பெரும் எண்ணிக்கையாளர்களிடம் சென்றடைந்துள்ளமை சிறப்பிற்குரியதாகின்றது.

வாசிப்பின் முக்கியத்துவம் கருதி இளம் தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களினால் ஆற்றுகை செய்யப்பட்ட "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற தெரு வெளி ஆற்றுகையானது காலத்தின் தேவை கருதிய ஒன்றாகவும் அமைந்து விளங்குகின்றது.

# கே.வி. மகாதேவன்



## 31

- பி.ஜி.எஸ்.மணியன் -

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் - சிவாஜி கணேசன் ஆகிய இருவருக்குமே 1963 இல் பல வெற்றிப் பாடல்களைக் கொடுத்தார் கே.வி.மகாதேவன்.

எம்.ஜி.ஆர். படங்களை எடுத்துக்கொண்டால் சின்னப்பா தேவரின் தொடர் வெற்றிப் படங்களான "நீதிக்குப் பின் பாசம்", "தர்மம் தலை காக்கும்", டி.ஆர். ராமண்ணாவின் "கொடுத்து வைத்தவள்", ஜூபிடரின் "கலை அரசி", கருணாநிதியின் சொந்தத் தயாரிப்பான "காஞ்சித் தலைவன்", டி. யோகானந்தின் "பரிசு" ஆகிய படங்கள் கே.வி.மகாதேவனின் மகத்தான இசையில் வெளிவந்தன.

"நீதிக்குப் பின் பாசம்" - எம்.ஜி.ஆருடன், சரோஜாதேவி, எஸ்.வி.ரங்கராவ், கண்ணாம்பா, எஸ்.ஏ.அசோகன், எம்.ஆர். ராதா, எம்.என். நம்பியார் ஆகிய திறமை சாலிகளின் களமாக அமைந்த படம் இது.

கண்ணதாசனின் பாடல்களுக்கு டி.எம்.எஸ். - பி. சுசீலா. எல்லாப் பாடல்களையும் வெற்றிப் பாடல்களாக்கினார் கே.வி. மகாதேவன்.

"அக்கம் பக்கம் பார்க்காதே"

"மானல்லவோ கண்கள் தந்தது"

"வாங்க வாங்க கோபாலய்யா" பி. சுசீலா தனித்துப் பாடும் இந்தப் பாடலில் சரணத்தின் கடைசி வரியை வாத்தியங்கள் இல்லாமல் குரலை மட்டும் ஒலிக்கவைக்கும் தனது தனிப் பாணியைக் கையாண்டு பாடலுக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார்.

"இடி இடிச்சு மழை பொழிஞ்சு எல்லாம் நின்னாச்சு" - ஆகிய பாடல்கள் பெருத்த வரவேற்பைப் பெற்ற பாடல்களாக அமைந்தன.

நடிகை கண்ணாம்பா எம்.ஜி.ஆர் - சரோஜா தேவியை வைத்து தயாரித்த சொந்தப் படம் "தாலிபாக்கியம்". கண்ணாம்பாவின் கணவர் நாகபூஷணம் படத்தை இயக்கி இருந்தார். மூத்த தாரத்து மகன் மீது மையல் கொள்ளும் சிற்றன்னை தனது ஆசைக்கு இணங்காத அவன் மீது பழி சுமத்தி தந்தையை விட்டே மகனைப் பிரிக்கும் "அசோக்குமார்" காலத்து கதை. எம்.ஜி.ஆர். சரோஜாதேவியுடன், எஸ்.வி. சுப்பையா, எம்.என். ராஜம், கண்ணாம்பா நடித்திருந்தார்கள்.

படம் தயாரிப்பில் இருந்தபோது கண்ணாம்பா புற்றுநோயால் பாதிக்கப்பட்ட காரணத்தால் தயாரிப்பில் ஏற்பட்ட காலதாமதம் படத்தின் வெற்றியைப் பெருமளவு பாதித்து விட்டது. படமும் ரசிகர்களால் நிராகரிக்கப் பட்டது. மகாதேவனின் இசையில் பாடல்கள் ஒன்று கூட எடுபடாமல் போனது - அதுவும் எம்.ஜி.ஆர். படத்தில் - என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் "தாலிபாக்கியத்"தில் தவறவிட்ட வெற்றிக்கொடியைத் "தர்மம் தலை காக்கும்" படத்தில் எம்.ஜி.ஆர். மீட்டுக்கொண்டார் என்றால் அதற்கு உறுதுணையாக கே.வி. மகாதேவனின் இசையும் இருந்தது.

கண்ணதாசனின் காவிய வரிகள் மகாதேவனின் இசையில் மங்காப் புகழை எம்.ஜி.ஆருக்கு கொண்டுவந்து சேர்த்தன.

"தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்" - சங்கராபரண ராகத்தின் அடிப்படை ஸ்வரங்களை




வைத்துக்கொண்டு தேர்ந்த மெல்லிசை.

"தொட்டுவிடத் தொட்டுவிடத் தொடரும்" - உற்சாகமான ஒரு டூயட்.

"மூடுபனி குளிரெடுத்து" - அருமையான ஒரு மெலடி.

"ஒருவன் மனது ஒன்பதடா அதில் ஒளிந்து கிடப்பது எண்பதடா" - தத்துவப் பாடல்.

என்று எல்லாம் வெற்றிப்பாடல்களாகக் கொடுத்து படத்தின் வெற்றிக்கு உதவினார் கே.வி.மகாதேவன்.

எம்.ஜி.ஆருக்கு பொருத்தமான குரல் டி.எம்.எஸ் தான் என்ற நிலை உருவாக மகாதேவனின் பாடல்கள் காரணமாக அமைந்தன.

ஆனால் அந்தச் சூழலிலும் சீர்காழி கோவிந்தராஜனை தைரியமாக எம்.ஜி.ஆருக்காகப் பாடவைத்து அந்தப் பாடலையும் வெற்றிப்பாடலாக்கினார்.

ஆரம்ப காலங்களில் எம்.ஜி.ஆருக்கு பாடியவர் தான் சீர்காழி கோவிந்தராஜன். ஆனால் அறுபதுகளில் டி.எம்.எஸ்.ஸின் வெற்றிக்கொடி பரவியபோது அசரீரிப் பாடல்களைப் பாடும் வாய்ப்புகளே சீர்காழி கோவிந்தராஜனை அதிகம் தேடிவந்தன.

அந்தச் சூழலில் டி. ஆர். ராமண்ணாவின் "கொடுத்துவைத்தவள்" படத்தில் ஒரு டூயட் பாடலை எம்.ஜி.ஆருக்காக சீர்காழி கோவிந்தராஜனைப் பாடவைத்தார். உடன் பாடியவர் ஜமுனா ராணி.

"பாலாற்றில் சேலாடுது" - படத்தின் ஆரம்பக் காட்சியே இந்தப் பாடலுடன் தான் துவங்குகிறது. இந்தக் காட்சியில் எம்.ஜி.ஆருடன் நடித்திருந்தவர் எல். விஜயலட்சுமி.

ஈ.வி. சரோஜா - எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்த படம் இது.

"நீயும் நானும் ஒன்று" - படத்தில் இரண்டு முறை வரும் பி.சுசீலாவின் மென்மையாக மனதை வருடும் பாடல்.

"என்னம்மா சௌக்கியமா எப்படி இருக்குது மனசு" - உற்சாகமான டூயட் பாடல் . டி.எம்.எஸ். பி.சுசீலாவின் குரல்களில்.

"காஞ்சித் தலைவன்" - படத்திலே பி. பானுமதி சொந்தக் குரலில் பாடும் "மயங்காத மனமின்று மயங்கும்" - கே.வி.மகாதேவனின் இசையில் பானுமதியின் ஹிட் பாடல்கள் வரிசையில் சேர்ந்துவிட்ட பாடல்.

டி.எம்.எஸ்.- சுசீலாவின் குரல்களில் "வானத்தில் இருப்பது ஒரு நிலவு" என்ற டூயட் பாடலை எஸ்.எஸ்.ஆர் - விஜயகுமாரிக்காக டி.எம்.எஸ். - சுசீலாவின் குரல்களிலும், அதே குரல்களில் "ஒருகொடியில் இருமலர்கள் பிறந்ததம்மா" - சோகப்பாடலை எம்.ஜி.ஆர். - விஜயகுமாரிக்காகவும் அமைத்துக் கொடுத்தார்.

இப்படி அந்த ஆண்டு வெளிவந்த எம்.ஜி.ஆரின் படங்களில் எல்லாம் தனது வெற்றி முத்திரையை அழுத்தமாகப் பதித்தார் கே.வி.மகாதேவன்.

(தொடரும்)



# புண்ணைக் காட்டி பிச்சையெடுத்தால்.....

- முருகபூபதி -

[உருவகக்கதை]

குடையாக நிழல் பரப்பி அந்த வீதியோரத்தில் ஆலமரம் செழித்து வளர்ந்திருக்கிறது. அதன் கீழே ஒரு பிச்சைக்காரன்.

அவனால் வேலைகள் செய்யமுடியும். வேலை செய்தால் வேலைக்காரன்தான். ஆனால் - அவன் எங்கே வேலை செய்து உழைத்தான்...?

பொழுது புலர்ந்துவிட்டால் அந்த ஆலமரத்தடிக்கு வந்துவிடுவான். அழுக்குப்படிந்த ஒரு துண்டை விரித்துவிட்டு அமர்ந்துகொண்டு காலை நீட்டுவான்.

அவனது ஒரு காலில் புண். ஒரே ஒரு பெரிய புண்.

இலையான்கள் அதில் மொய்க்கும். அவனோ காகிதத்தினால் விசுக்கியவாறு கையேந்தி பிச்சை கேட்பான்.

தனது காலில் ஆறவிடாது வைத்திருக்கும் புண்ணைக் காண்பித்து தனக்கு கருணை காட்டுமாறு கை நீட்டுவான்.

சிலர் அவனது நிலைகண்டு இரங்கி காசு போட்டுச்செல்வர்.

மாலையானதும் சேர்ந்த பணத்தை எண்ணி எடுத்துக்கொண்டு அதில் சொற்பத்தை கள்ளுக்குடிக்க செலவு செய்வான்.

அவனை பல நாட்களாக அவதானித்துவந்த ஆலமரம் யோசித்தது. இந்தச் சோம்பேறி காலின் காயத்தைக் காண்பித்தே உயிர் வாழப் பழகிக்கொண்டான்.

ஆறறிவு படைத்த அந்தச் சோம்பேறியை பார்க்கும்போதெல்லாம் தனது கிளைகளில் கூடுகட்டி வாழும் பறவைகள் பொழுது புலர்ந்ததும் பறந்துசென்று தமக்கும் தமது குஞ்சுகளுக்கும் இரை தேடிவருவதுதான் நினைவுக்கு வரும்.

அந்தப் பறவைகளுக்குள்ள உணர்வுகூட உடலில் வலுவுள்ள இந்தப் பிச்சைக்காரனுக்கு இல்லையே என்ற கோபம் ஆலமரத்திற்கு. தனது கால் புண்ணைக் காண்பித்தே வாழப்பழகிவிட்டான். இவனுக்கும் நான் நிழல் தரவேண்டியிருக்கிறதே...

"அடேய் ஏனிப்படி உலகை ஏமாற்றுகிறாய்....? ஆஸ்பத்திரிக்குச்சென்று புண்ணைக் காண்பித்து மருந்து கட்டி கால் புண்ணைக் குணப்படுத்திவிட்டு ஏதும் வேலைக்குச் செல்லமாட்டாயா...?" என்று எவராவது அவனைக் கேட்டு புத்திபுகட்ட மாட்டார்களா...? என்று ஆலமரம் யோசித்தது.

ஒரு நாள் ஒரு வயதான மூதாட்டி அந்த ஆலமரத்தடிக்கு வந்தாள்.

அவள் தோசை விற்கும் கிழவி. அதிகாலையே எழுந்து தோசைகள் சுட்டு ஒரு கடகத்தில் வைத்து சுமந்துகொண்டு தனது வாடிக்கையாளர் வீடுகளுக்குச்சென்று விற்றுவிட்டு பகலானதும் சந்தைக்குச் சென்று காய்கறிகளும் வாங்கிக்கொண்டு வீடு திரும்புவாள்.

வயதான காலத்திலும் உழைத்துச் சாப்பிடும் அவளது இயல்பு - எவர் கையையும் எதிர்பார்க்காமல் வாழும் அவளைப் பார்க்க ஆலமரத்துக்கு பெருமையாக இருந்தது.

ஆலமரத்தடியில் வந்து நிழலில் இளைப்பாறிய மூதாட்டியிடம் அந்தப் பிச்சைக்காரன் கையேந்தினான். "எனக்குப் பசிக்கிறது... மூன்று தோசை தாருங்கள்" எனக் கேட்டான்.

"காசு... தா... தோசை தருகிறேன்." என்றாள் மூதாட்டி.

"ஐயோ...காசா... நான் பிச்சைக்காரன். எனக்கு எல்லோரும் காசு தருகிறார்கள். நீங்கள் தோசை மாத்திரம் தாருங்கள். வயிறார சாப்பிடுவேன். உங்களுக்கும் புண்ணியம் கிடைக்கும்" பிச்சைக்காரன் கையெடுத்து கும்பிட்டான்.

"உனது புண்ணியம் ஒரு புறம் இருக்கட்டும். என்னிடம் தோசை இருக்கிறது. ஆனால், சும்மா தரமாட்டேன். நீ... பிச்சை எடுத்த காசு இருக்கிறதல்லவா...? அதைக் கொடுத்து வாங்கிச்சாப்பிடு. சரியா..." என்றாள் மூதாட்டி.

"ஆச்சி, நீங்கள் இப்படிச் சொல்லலாமா...? எனது காலில் உள்ள புண்ணைப் பாருங்கள். நான் பிச்சைக்காரன். என்னிடம் நீங்கள் காசு கேட்கலாமா...?"

"டேய்... என்னைப்பார், இந்த வயதிலும் உழைத்துச் சாப்பிடுகின்றேன். நீ என்னிடம் பணம் கொடாமல் தோசை கேட்கலாமா...?" மூதாட்டி அவனை முறைத்தாள்.

"எனது நிலை அறிந்தும் இரக்கம் இல்லாமல் இப்படி பேசுகிறீர்களே... நான் என்னதான் செய்வேன். இந்தக்கால் புண் ஆறி சுகமாகிவிட்டால் நானும் உழைத்துச் சாப்பிடுவேன். இப்படி பிச்சை எடுக்க மாட்டேன்." என்றான் அந்தப் பிச்சைக்காரன்.

"அப்படியா... சரி... என்னுடன் வா... ஆஸ்பத்திரிக்குப் போவோம். மருந்து கட்டுவோம். புண் சுகமாகிவிடும். வருகிறாயா...?" மூதாட்டி அழைத்தாள்.

"ஐயோ... மாட்டேன். புண் சுகமாகிவிட்டால் பிறகு நான் பிச்சை எடுப்பது எப்படி...? எனது தொழிலுக்கே மோசம்தான். நான் வரமாட்டேன். என்னால் முடியாது." என்றான் பிச்சைக்காரன்.

மூதாட்டி கலகலவென சிரித்தாள்.

"ஏய்... அப்படிச்சொல்... காலம்பூராகவும் இப்படி இந்தப் புண்ணைக் காண்பித்தே பிச்சை எடுத்துப் பழகிவிட்டாய். அதுவே உனது வாழ்க்கையாகிவிட்டது. நீ...உருப்படமாட்டாய். முடிவில் என்ன நடக்கும் தெரியும்தானே...? இந்தப் புண் புரையோடி கால் அழுகி நீ செத்துப்போவாய். உன்னைப்போன்ற சோம்பேறிக்கு நான் தோசை தரமாட்டேன். பணமும் தரமாட்டேன். உழைத்து உண். அல்லது செத்துத்தொலை." மூதாட்டி சொல்லிவிட்டு தனது தொழிலுக்குப் புறப்பட்டாள்.

அவர்களுக்குள் நடந்த உரையாடலை அவதானித்த ஆலமரம் மூதாட்டியை பெருமையுடன் பார்த்து தனது கிளைகளை அசைத்தது.

# அதிர்ச்சியூட்டும் ஃபாஸ்ட் ஃபுட் கடைகள்

**ஃபாஸ்ட் ஃபுட் கடைக்காரர் ஒருவரின் ஒப்புதல் வாக்குமூலம்:**



- அன்று வாங்கிய சிக்கன் மட்டுமே உபயோகப்படுத்துவதில்லை. இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு முன் வாங்கிய மிஞ்சிய சிக்கனைத்தான் அதிகமாக உபயோகிக்கிறோம். அவ[illegible] வினிகரில் கழுவி உபயோகிக்கும்போது அந்தக் கெட்டுப்போன வாடையை வாடிக்கையாளர்கள் அறிவதில்லை.

- சிக்கன் ரைஸ் செய்யும்போது வெள்ளையாக உள்ள சிக்கனை சிவப்பாக மாற்ற ஒறேஞ்ச் பவுடரை உபயோகிக்கிறோம். ஆனால், அது ஒரு தடை செய்யப்பட்ட பொருள். அந்த ஒறேஞ்ச் பவுடரை உங்கள் கையில் கொட்டி திருப்பி கை கழுவினால்கூட அந்தச் சிவப்பு சாயம் உங்கள் கையில் இரண்டு நாள்களுக்கு இருக்கும். அது உங்கள் வயிற்றுக்குள் போனால்?

- சோயா சோஸ்: இதன் விலை அதிகமாக இருப்பதால் இதை நாங்கள் அப்படியே உபயோகிப்பதில்லை. மாறாக தண்ணியோ அல்லது ஒரு வாரத்திற்கு முன்னர் உபயோகித்த எண்ணெயையோ கலந்து செய்கிறோம்.

- வறுத்த சோறாக்க தாச்சியை உபயோகிக்கும்போது சோறு தாச்சியில் ஒட்டக்கூடாது என்பதற்காக அதிக அளவு எண்ணெயை அதில் கொட்டுகிறோம்.

- இன்னொன்று சொன்னால் நம்ப மாட்டீர்கள்... அந்த சோறு போட்டு கிண்டும் தாச்சியை நாங்கள் ஒரு வாரத்திற்கு கழுவ மாட்டோம். காரணம் அதில் உள்ள எண்ணெய்ப் பசை போகக் கூடாது என்பதற்காக. நாங்கள் கழுவி எண்ணெய்ப் பசை போய்விட்டால் அடுத்த நாள் எங்களுக்கு அதிக காஸ் வேஸ்டாகிவிடும்.

- அஜினமோட்டோ: இதை அதிகமாக உபயோகிக்கிறோம். அது உடலுக்குக் கேடு உண்டாக்கும் பொருள். இதைத் தொட்டு உங்கள் நாக்கில் வைத்தால் அந்த இடம் மரத்துவிடும். சோதித்துப் பாருங்கள்.

- சில்லி சோஸ்: கிட்டப்போய் முகர்ந்து பார்த்தால் முகம் சுளிக்கிற அளவுக்கு கெட்ட வாடை அடிக்கும்.

நன்றி: ource fast food shops and awareness group.

வீட்டில் இருந்தபடி நீங்களே "ஃபேஸ் மாஸ்க்" தயாரித்து உங்கள் முகத்தை பளபளப்பாக ஆக்கிக் கொள்ள முடியும். இதோ உங்களுக்காக:

வறண்ட சருமத்திற்கு

ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி சோளமா, இரண்டு தேக்கரண்டி பாதாம் எண்ணெய் மற்றும் ஐந்து துளி ஜெரேனியம் எசன்ஸ் ஓயில், முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றை கலந்து மிக்சியில் அடித்துக் கொள்ள வறண்ட சருமத்திற்கான "ஃபேஸ் மாஸ்க்" தயார். பின் அந்தக் கலவையை முகத்தில் பூசி 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும்.

மென்மையான சருமத்திற்கு

இரண்டு தேக்கரண்டி சன்பிளவர் எண்ணெய், ஐந்து துளி ரோஸ் எசன்ஸ் ஓயில், முட்டையின் மஞ்சள் கரு மற்றும் நன்கு பழுத்த வாழைப்பழத்துடன் கலந்து வெதுவெதுப்பான தண்ணீரில் முகத்தை கழுவ வேண்டும். இந்த வகை "ஃபேஸ்மாஸ்க்" மென்மையான சருமத்திற்கு ஏற்றது.

எண்ணெய் சருமத்திற்கு

ஒரு தேக்கரண்டி தயிர், அரை தக்காளி, ஐந்து துளி ஒறேஞ்ச் எசன்ஸ் ஓயில், மூன்று தேக்கரண்டி முல்தானி மட்டி, ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடங்கள் கழித்த பின் முகத்தை கழுவ, எண்ணெய்ப் பசை நீங்கி, முகம் பளபளக்கும்.



# முகம் பொலிவு பெற!

# பட்டுக்கோட்டையின் கடைசிப் பாடல்!




பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் இறந்தபோது, அவரது பூதவுடலைச் சுற்றித் திரையுலகப் பிரமுகர்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவர் நடிகை பண்டரிபாய். அவரது கையில் அந்நேரம் ஒரு தாள் இருந்தது. அந்தத் தாளில்,

**"தானா எவனும்<br>
கெட மாட்டான்<br>
தடுக்கி விடாம<br>
விழ மாட்டான்!<br>
போனா எவனும்<br>
வர மாட்டான் - மேலே<br>
போனா எவனும்<br>
வர மாட்டான் - இதப்<br>
புரிஞ்சிக்கிட்டவன்<br>
அழ மாட்டான்"**

என்று எழுதப் பட்டிருந்தது. இந்தப் பாடல்தான், பட்டுக்கோட்டையார் கடைசியாக எழுதிய பாடலாகும். நடிகை பண்டரிபாய் தயாரிப்பில் உருவாக இருந்த "மகாலட்சுமி" படத்திற்காகக் கவிஞர் எழுதியிருந்த பாடல் அதுவாகும்.

# சிறந்த நிர்வகிப்பாலும் ஆசான்களின் அர்ப்பணிப்பாலும் சீர் பெற்று வரும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை




**பணிக்கூற்று**

தேசிய கல்வி நோக்கங்களை அடையும் வகையில் தரமான செயற்பாடுகளின் ஊடாக தேர்ச்சிகளைப் பெறச்செய்து மாணவர்களிடத்தே மறைந்திருக்கும் தனியாள் திறன்களை செழுமையேற்றி தொடர் தேர்ச்சிகளிற்காக தொடர்ந்து இயங்கும் மனப்பாங்கு உடையவராக ஆக்கும் கற்றல், கற்பித்தல், இணை பாட செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

**நோக்கக் கூற்று**

எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுத்து, சமூகப் பொருத்தப்பாடுடைய, சுயமாக இயங்கக் கூடிய, ஒழுக்கமும் சீலமும் கொண்ட பிரஜையை உருவாக்கல்.

**பாடசாலை பற்றிய சுருக்க வரலாறு**

இலங்கையின் வடமாகாணத்தில் தமிழர் பண்பாடு சிறந்தோங்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கல்வியும் பண்பும் உயர்ந்து மிளிர்கின்ற கொக்குவில் எனும் ஊரில கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து பிரிந்து கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையாக தனித்துவம் பெற்றது.

1989 ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறத் தொடங்கின. இதன் அடிப்படையில் 1997 இல் நான்கு மாணவர்கள் முதன்மைப் புள்ளிகளைப் பெற்றதோடு இவர்களில் இரு மாணவர்கள் ஜனாதிபதியிடம் பரிசும் பெற்றுள்ளனர். அதே போன்று 2000ம் ஆண்டுப் பரீட்சையில் ஒரு மாணவன் அகில இலங்கையில் பத்துப் பேரில் ஒருவராக முதன்மைப் புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

கற்றல் முன்னேற்றத்தில் பெரும் வளர்ச்சி கண்டுள்ள இப்பாடசாலை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்திலும தேசிய ரீதியாகவும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இவை தவிர ஆரம்ப பிரிவு இணைபாடவிதான செயற்பாடுகளில் வாய்ப்பாடு மனனம், துரித கணிதச் செய்கை, திருக்குறள் மனனம், இசையும் அசைவும் ஆகியவற்றில் மாகாணமட்டத்தில் முதல் இடங்களையும் தேசிய மட்டத்தில் பாவோதலுக்கு பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலதினப் போட்டிகளிலும் இப்பாடசாலை வாசிப்பு,பாடுதல்,சிறுவர் நாடகம் ஆகிய போட்டிகளில் வலய மாகாணம் என்பவற்றில் முதலிடங்களையும் பெற்றுள்ளது. ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் அரங்கு போட்டியில் பல தடவைகள் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வளர்ச்சிகள் பல பெற்று சிறந்த ஆரம்பப் பாடசாலையாக மிளிரும் இப் பாடசாலையின் பாடசாலைக் கீதத்தை திரு.கு.சண்முககுமரேசன் இயற்றியுள்ளார். இக் கீதத்தின் படி கொக்குவில் கிராமத்தில் அறிவு பரப்பும் பாடசாலையாக திகழும் இப் பாடசாலை 'இள மையில் கல்' எனும் மகுட வாசகத்துடன் இன்றும் மாணவச் சிறார்களுக்கு அறிவை விருத்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றது.

அதிபர் திருமதி செ. சகாதேவன் 27.09.2012 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்ல 7.1.2013 ஆம் திகதி திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அதிபராக கடமையைப்பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் இப் பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் கொண்டு சென்று கல்வி அபிவிருத்தியில் தொடர்ந்தும் முன்னேறிவருவதுடன் மாணவர்களை கற்றலில் ஊக்குவிப்பதற்கு அலகுரீதியான பரீட்சைகளை நடாத்தி ஒவ்வொரு பரீட்சையிலும் உயர்புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தி 2013, 2014 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியதுடன் ஆசிரியர்களை மகிழ்வுடன் கற்பித்தலில் ஈடுபடக் கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

இவர் தரம் 1இல் இருந்து தரம் 5 வரையான வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகையில் வகுப்பறைகளுக்கு தளபாடங்களை ஒழுங்குபடுத்தியதுடன் மின் விளக்குகளுடன் மின் விசிறிகள் கொண்டதாகவும் அமைத்ததுடன் நவீன கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் மல்ரி மீடியாக்கள் கொண்ட கற்பித்தல் வசதிகளையும் ஏற்படுத்தியதுடன் ஆசிரியர்களின் நலனிலும் அக்கறைகொண்டு வாகன தரிப்பிடத்தை திரு.மு. இந்திரசேனன் பெற்றோரின் உதவியுடன் அமைத்துள்ளார்.

திரு. கு. சண்முகக்குமரேசனால் இயற்றப்பட்ட பாடசாலை கீதத்தை திரு.கோ.சத்தியன் இசையமைப்புடன் இசைத்தட்டு வடிவில் அமைத்து காலையும் மாலையும் இசைக்கப்பட்டு வருகின்றது.

காலை ஆராதனையின் முடிவில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகளை சிறப்புடன் செய்வதற்கு ஏற்ற வகையில் ஒலிபெருக்கி வசதிகளையும் பெற்றுத்தந்துள்ளார்.

ஆரம்ப கல்வியிலிருந்தே மாணவர்களிடத்து தலைமைத்துவ பண்பை வளர்க்கும் நோக்குடன் மாணவ தலைவர்களைத் தெரிவு செய்து பயிற்றுவித்து அவர்களுக்கு சின்னம் சூட்டி பாடசாலை கட்டமைப்பில் ஒரு படிநிலை வளர்ச்சியை 2014ஆம் ஆண்டில் ஏற்படுத்தியுள்ளார். எமது பாடசாலை ஆரம்பக் கல்வித் துறையிலே முதல் நிலை மாதிரிப் பாடசாலையாக நிலை நிறுத்தி சமூகத்திற்கு பொருத்தப்பாடான சிறார்களை உருவாக்கி தரம் 6இற்காக பாடசாலைகளுக்கு கையளிக்கும் கடமையில் கருத்துடன் செயற்பட்டு வருகின்றார்.

தற்பொது அதிபராக கடமையாற்றிவரும் திரு.பே.தனபாலசிங்கம் அவர்களின் முயற்சியாலும் நிர்வாக சிறப்பாலும் பல வரலாற்றுச் சாதனைகளை இப்பாடசாலை நிலைநாட்டி வருகின்றது.




**அதிபர்**
**திரு.பே.தனபாலசிங்கம்**



பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்



பிரதி அதிபர்
திருமதி.ஜெ.வரதராசா



தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2014 இல் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று வெற்றிச்சாதனையை நிலை நாட்டிய மாணவர்களும் அதற்கு வழிகாட்டிய அதிபர் ஆசிரியர்களும்.

# ஆசிரியர்களின் வளப்பற்றாக்குறை முதலில் சீர்செய்யப்படவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் கல்வித் துறையைப்பொறுத்தவரை தொடர்ச்சியாக ஆசிரியர்கள் இம் மாவட்டத்திற்கு வெளிச் செல்கின்றார்களே தவிர உள்வருகின்றார்கள் இல்லை இது இந்த மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தி வருகிறது.

இருக்கின்ற ஆசிரியர்களை சீராக, பாரபட்சமின்றி வளப்பங்கீடு செய்ய முடியாத சூழ்நிலை நற்ற நிலைமையின் வெளிப்பாடே இது. எனவே சவால்களுக்கு மத்தியிலேயே நாம் கல்வி வளர்ச்சிக்காக போராட வேண்டியுள்ளது என ஈபிடிபி. யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.




கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் 26 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய ஒரு மாடி வகுப்பறை கட்டட தொகுதியினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண கல்வி அமைச்சுக்கு 2014 ஆம் ஆண்டுக்கென கல்வி அபிவிருத்திக்காக பி.எஸ்.ரி.ஜி நிதிக்கு ஊடாக 277 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் அதில் 25 வீதமான நிதிகூட செலவு செய்யப்படவில்லை. அதேபோன்று ரீ.எஸ்.ரி.ரி என்று சொல்லப்படுகின்ற உலக வங்கி கடனுக்கு ஊடாக வழங்கப்பட்ட 290 மில்லியன் ரூபாவில் 50 சதவீதம் கூட இதுவரை செலவு செய்யப்படவில்லை. இது பற்றி நாங்கள் இங்கு அரசியலுக்காக வாய்க்கு வந்தபடி பேசவில்லை ஆவண ரீதியாக ஆதாரத்துடன் பேசுகின்றோம். வழங்கப்படுகின்ற நிதியினைக்கூட செலவு செய்யாமல் எங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் விளையாடுகின்றவர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

வன்னியிலே பல பாடசாலைகள் பல்வேறு வளப்பற்றாக் குறைகளுடன், தேவைகள் பூர்த்தி செய்யப்படாதா என்ற ஏக்கத்துடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட நிதி கல்வி வளர்ச்சிக்காக செலவு செய்யப்படாமல் திரும்பிச் செல்லும் நிலையில் காணப்படுகிறது என்றார்.

பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பளை பிரதேச செயலாளர் திருமதி ப.ஜெயராணி, சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மாட்டின் சூடர் என பலர் கலந்துகொண்டனர்.




## பெரியபுராணத்து அடியவர்கள் - 02

பெரியபுராணத்து அடியவர்கள் பல்வேறு தொண்டுகளில் ஈடுபட்டனர். திருக்கோயில் பணி செய்தவர்களும் உண்டு. திலகவதியார் திருநீலநக்கர், புகழ்ச்சோழர் முதலியவர்கள் திருக்கோயில்தொண்டை செய்திருக்கிறார்கள். என்றாலும்நேரடியாக திருக்கோயில் தொண்டு செய்வதைவிட மக்கள் தொண்டு செய்தவர்களே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் அடியவர்களுக்கு சட்டி கொடுத்தல், துணி கொடுத்தல், வேண்டுவனவற்றைத் தருதல், அன்னமிடுதல், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்று வரும் போது இவை யெல்லாம் மக்கள் தொண்டின் பாற்படும்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவழிமிழலையின் பஞ்சம் தீரும் வரையில் அன்னமிட்டது எல்லாம் மக்கள் தொண்டின் பாற்படும். எனவே இந்தத்தொண்டு செய்வதில் ஓர் இன்பத்தை இவர்கள் கண்டார்கள்.

இந்த மக்கள் தொண்டே அவர்களது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும். வீடு பேற்றைத் தருவதற்கும் கருவியாக அமைந்தது என்பதை நாம் அறிய முடிகிறது. இதை விட இந்தத் தொண்டு செய்தவர்களில் இன்று கூடப் பலர் நூற்றுக்கணக்கானவர்களுக்கு அன்ன மிடுகின்றார்கள். பலர் திருக்கோயிலைக் கட்டுகிறார்கள். அப்படி இருக்க இவர்களைவிட பெரியபுராணத்தில் வருகின்றவர்கள் எந்த விதத்தில் உயர்ந்தவர்கள் என்ற வினா நியாயமான வினாவாகும்; இங்கே ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று இருக்கின்றது.

இன்று அறம் செய்பவர்கள் உண்டு. ஆனால் இவர்களது அறச்செயல்கள் இறையுணர்வை அடித்தளமாகக் கொண்டு நடைபெறுகின்றதா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அறச்சாலைகள் அமைத்தலும், கோயில் கட்டுதலும், அன்னதானமிடுதலும் இறையுணர்வுடன் செய்யப்படுமாயின் வணக்கத்திற்குரிய செயல்களாகும். அதை விடுத்து விளம்பர நோக்குடனும், புகழ் பெறுவதற்கான ஒரு வழியாகவும் கருதிச் செய்யப்படுமாயின், இவர்களின் அறச்செயல்களை பெரியபுராணத்து அடியவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா?

இளையான்குடி மாறனார் வரலாற்றில் நிறைந்த செல்வத்தோடு இருக்கின்ற வரையில் அவர் அன்னம் இட்டார் எல்லாம் கொடுத்தார் எல்லாம் சரி ஆனால்.

"வறுமை பதம் புக உன்னினார் தில்லை மன்னினார்"

என்று சொல்லுவார் இவ்வளவு செல்வம் மல்கிய போது அச்செயல்கள் செய்வது அன்றியும், அல்லல் நல்குரவான போதிலும் இச்செயல் செய்வார் அதுதான் பெரியபுராணத்தின் நுணுக்கம். (தொடரும்...)

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

'கத்தி' மக்கள் போராட்டங்களை கொச்சைப்படுத்துகிறது என்பதுதான் எனது வாதம். சினிமாவில் சில கம்யூனிஸ சார்பு வசனங்கள் இடம் பெற்றாலோ அல்லது சில மக்கள் பிரச்சினைகளை நமது ஹீரோக்கள் போகிற போக்கில் வசனங்களாக உதிர்த்தாலோ மக்களிடம் அதன் வழியாக பெரிய விழிப்புணர்வு வந்துவிடும் என்பது வேடிக்கை. எம்.ஜி.ஆரும், ரஜினியும், கமலஹாசனும், விஜயகாந்தும் பேசாத மக்கள் பிரச்சினைகளா? எவ்வளவு சோஷலிச வசனங்களை அவர்கள் உதிர்த்திருக்கிறார்கள்?

உண்மையில் அந்தக் கருத்துக்கள் அவர்களது ஹீரோயிஸத்தை வளர்ப்பதற்கான பின்புலங்களாக பயன்பட்டிருக்கின்றனவே தவிர, எந்த ஒரு சமூக அரசியல் விழிப்புணர்வுக்கும் அவை பயன்பட்டதில்லை. நேற்று பண்ணையாரை எதிர்த்து ஒர் ஹீரோ பேசினார் என்றால் இன்று கார்பரேட்டை எதிர்த்துப் பேசுகிறார். இப்படியெல்லாம் காற்றில் துண்டு துண்டாக பரவும் சொற்களால் எந்தப் புரட்சியும் வந்ததாக சரித்திரம் இல்லை.

மேலும் அந்த சித்தரிப்புகள் அந்தப் பிரச்சினைகளை மேலோட்டமாக கையாளுகின்றன. மக்களிடம் நாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு இத்தகைய அரைவேக்காட்டுத்தனமான அரசியல் சவடால்கள் எந்த விதத்திலும் உதவப்போவதில்லை என்பதை விஜய் பேசும் வசனங்களைப் பார்த்து ஆறுதல் அடைபவர்கள் உணரவேண்டும். ஆம் அரசியல் சார்ந்த நம் கையாலாகாத் தனங்களுக்கு இவை ஒரு அரைவேக்காட்டுத்தனமான ஆசுவாசத்தை அளிக்கின்றன. அதனால்தான் ராமநாராயணனின் ஆடு மாடுகளை வைத்து எடுக்கப்படும் படங்களால் எந்த அபாயமும் இல்லை; ஆனால் ஒரு சூப்பர் ஹீரோ முன்னால் மக்கள் ஆடுமாடுகள் போல பயன்படுத்தப்படும் இத்தகைய போலி அரசியல் படங்கள் ஆபத்தானவை, அவை எப்போதும் போகாத ஊருக்கு வழிகாட்டுபவை.

விஜய் இந்தப் படத்தில் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஊழலுக்கும் எதிராக பேசும் சில வசனங்களைக் கேட்டு பலரும் புளகாங்கிதம் அடைகின்றனர். நமது அரசியல் சிந்தனைகள் எப்படி 'கத்தி' என்ற துருப்பிடித்த பிளேடால் மழிக்கப்படுகின்றன என்பதன் அடையாளம்தான் கத்தி.

ஒரு முக்கியமான பிரச்சினையை எவ்வளவு மலினப்படுத்த முடியுமோ அவ்வளவு மலினப்படுத்துகிறது இந்தப் படம். மக்கள் தலைவராக இருக்கும் ஜீவானந்தம் மிகவும் மங்கலான பலவீனமான கதாபாத்திரமாக, எந்த நிலையிலும் அழுது விடுபவர் போலவே படம் முழுக்கக் காட்டப்படுகிறார். ஆனால் அடிதடிகளில் ஈடுபடுபவரும் குற்றப் பின்னணி கொண்டவருமான கதிரேசனாக வரும் விஜய்யோ எல்லையற்ற ஆற்றல் கொண்டவராக சித்தரிக்கப்படுகிறார்.

ஒரு மக்கள் போராட்டத்தில் மக்களிடமிருந்து வரும் தலைவர்களை பலவீனமானவர்களாகவும் வெளியே இருந்து வருபவர்களை ஆற்றல் மிக்கவர்களாகவும் காட்டுவதன் மூலம் போராட்டங்கள் அல்ல, தனிமனித சாகசங்களே வெற்றியைத் தேடித்தரும் என்ற மனநிலையை காட்ட விரும்புகிறது. மேலும் இது விஜய்யின் அரசியல் கனவுகளை நேரடியாகப் பிரதிபலிக்கிறது. 'நான் வந்து உங்களை மீட்பேன்' என்று அவர் மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்கிறார்.

மக்களின் போராட்டத்தை இந்த அளவு கொச்சைப்படுத்துகிற இந்தப் படம், ஒரு நல்ல 'மெசேஜ்'ஜை சொல்வதாக நம்புகிறவர்களுக்கு ஒரு கேள்வி. தமிழில் எந்தப் படம்தான் நல்ல 'மெசேஜ்' சொல்லவில்லை? ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் எதிராக நமது ஹீரோக்கள் எவ்வளவு வசனங்களை உதிர்த்திருக்கிறார்கள். அதெல்லாம் சமூகத்தில் ஊழலுக்கு எதிரான மனநிலை எதையேனும் உருவாக்கியிருக்கிறதா? ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டு கைது செய்யப்பட்டபோது பெரும்பாலான தமிழர்கள் ஜெயலலிதாவிற்காக இரக்கப்பட்டார்களே தவிர அவர் செய்தது தவறு என்று சொல்ல முன்வரவில்லை. அப்படியென்றால் ஊழலை எதிர்த்து எடுக்கப்பட்ட படங்களின் நிலை என்ன?

வர்த்தக சினிமா எப்படி காதலையும் காமத்தையும் கேளிக்கையாக்குகிறதோ அதேபோலத்தான் சமூகப் பிரச்சினைகளையும் கேளிக்கையாக்குகிறது. இந்தக் கேளிக்கைக்காக பிரச்சினைகள் வெட்டி சுருக்கப்படுகின்றன. உருமாற்றப்படுகின்றன. உண்மையான எதிரிகள் மறைக்கப்பட்டு போலி எதிரிகள் காட்டப்படுகிறார்கள். தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் உண்மையான மக்கள் மறைக்கப்பட்டு போலிப் போராளிகள் முன்னிறுத்தப்படுகிறார்கள்.

ஏ.ஆர்.முருகதாஸ், விஜய்யின் இந்த மசாலா சகதியில் தங்களுக்கான புரட்சிகர பருக்கைகளைத் தேடுகிறவர்களை நினைத்தால் உண்மையிலேயே கண்ணீர் வருகிறது.

**- மனுஷ்ய புத்திரன்**



## தெங்குப் பொருள் ஏற்றுமதி இவ்வாண்டு 66 வீத வளர்ச்சி

(கொழும்பு)

கடந்த ஜனவரி ஓகஸ்ட் மாதங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு மொத்த தெங்கு உற்பத்தி ஏற்றுமதியில் 66வீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய தெங்கு ஏற்றுமதியில் 2010 ஆம் ஆண்டு 32 பில்லியன் ரூபாவும் 2011 ஆம் ஆண்டில் 47 பில்லியன் ரூபாவும் 2012ஆம் ஆண்டில் 47 பில்லியன் ரூபாவும் 2013ஆம் ஆண்டில் 48 பில்லியன் ரூபாவும கிடைத்துள்ளன.

அக்காலங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு 66 வீத வளர்ச்சியேற்பட்டுள்ளது.2011ஆம் ஆண்டில் 127 நாடுகளுக்கும் 2012ஆம் ஆண்டில் 129 நாடுகளுக்கும் 2013ஆம் ஆண்டில் 131 நாடுகளுக்கும் 2014ஆம் ஆண்டில் ஓகஸ்ட் மாதமளவில் 123 நாடுகளுக்கும் தெங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இவைதவிர ஏற்றுமதிச் சந்தையில் இணையும் உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2011இல் 31 பொருட்களும் 2012 இல் 33 பொருட்களும் 2013 இல் 34 பொருட்களும் 2014 ஓகஸ்ட் மாதமளவில 35 பொருட்களும் ஏற்றுமதிச் சந்தையில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்வியியற் கல்லூரிகளில் கற்பவர்களும் பட்டதாரிகள்


(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் அனைவரும் 4 வருடங்களில் பட்டதாரிகளாக வெளிவருவார்கள். இதற்கான புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களும் இஸட் ஸ்கோர் அடிப்படையிலேயே இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். பல்கலைக்கழகத்துக்கு தெரிவானவர்களும் ஆசிரியர் தொழில் மீது ஆர்வம் கொண்டு பல்கலைக்கழகங்களுக்கு செல்லாமல் கல்வியியற் கல்லூரிகளில் இணைந்து கொள்கின்றனர்.

பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் ஒருவர் 4 வருடங்களில் பட்டதாரியாக வெளிவரும்போது கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர் மட்டும் பட்டதாரியாக வெளிவர முடியாத நிலை இருந்துவருகிறது.

இந்த நிலை மாற்றப்பட்டு இனிவரும் காலங்களில் அவர் பட்டதாரியாக வெளிவரும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார்.



## பரமர் சங்கமம்

'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" எண்ட அந்தக் காலம் மலையேறிப் போய் கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான் எண்ட புதுமொழி நடைமுறைக்கும் வந்தது.

நாலாம் ஈழப்போர் எண்டு வர்ணிக்கப்பட்ட புலிகளின் இறுதிக்காலம் முழவுக்குக் கொண்டு வரப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குப் பின்பாடு கொழும்பில் கொண்டு வரப்பட்ட லீசிங்கம் பனிகள் புற்றீசலாக வந்த காலத்தில் லீசிங்கில் வாகனம் வாங்கினோர் லஞ்சம் போலென்றே சொல்ல வேண்டியாய் போட்டுது.


உதால எத்தினபேர் நஞ்சைக் குடிசேம் கயித்தில் தொங்கி னேம்எண்டது பேப்பர்களைப் பார்த்துப் புள்ளி விபரம் எடுக்க வேணும் எங்கட சனங்கள் மீற்றர் வட்டிக்கும் பணம் கைமாறி உயிர்களை விட்டது சரித்திரம் பெற்றோல் நிரப்பேக்க ஓடுற மீற்றர் மாதிரி வட்டி ஏறிக்கொண்டிருக்கும் விசம் அந்த மீற்றர் வட்டி.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வைரமாளிகைப் பெரியவர் முருகமூர்த்தி ஐயா ஒரு நாள் கதைக்கேக்க உந்த பினான்ஸ் லீசிங்காரற்றை கொள்ளையை பற்றி விபரித்தார் கேட்டுப் போட்டு விறைச்சுத்தான் போனன் அதையெல்லாம் உங்களுக்கும் விபரிக்க வேணுமெண்டு கேட்டெழுதுகிறன். இதுவெறும் கணக் கெண்டு நினையாதேங்கோ இதுதான் லீசிங்கில் 50 லட்சம் பெறுமதியான வாகனம் ஒண்டை 10 லட்சம் கட்டி எடுக்கிற மெண்டு வையுங்கள். பத்து லட்சம் கட்டினாலும் ஐம்பது லட்சத்துக்கும அரசுக்கு 12 வீதம் வற்வரிகட்ட வேணும்.

அந்த வற்வரி 6 கணக்கு விடுகின்ற கணக்கெண்டே லட்சத்துடன் 46 லட்சங்களாகுது. 60 மாதங்கள் மொத்தப் பணத்தின் 20 வீதம் 5 வருடங்களுக்குச் செலுத்த வேண்டும் எல்லா மாக 92 லட்சங்களாகுது. அந்தத் தொண்ணூற்றிரெண்டு லட்சத் துக்கும் 12 வீத வற்வரி தனியாக 11 லட்சத்து 400 ரூபாகூட்டிப் பார்ப்பம் எங்கட 10 லட்சம் உடனடி வற்பரி 6 லட்சம் 60 மாதங்கள் இருபது வீதம் மொத்தத் தொகைக்கும் 5 வருடங்கள் செலுத் தியது 92 வட்சங்கள்.

அதுக்கும் 11 லட்சத்து 400 ரூபா 1 கோடி 19 லட்சத்து 400 ரூபா வருகுது 5 வருடங்களுக்கு முன்பாக 50 லட்சம் ரூபாவுக்கு பினான்ஸில் லீசிங்கெடுத்த வாகனத்தின் இன்றைய பெறுமதி வெறும் 32 லட்சம் மட்டும் தான் பாத்தீங்களா உவங்கள் எப்புடி எப்புடியெல்லாம் சுத்துறாங்களெண்டு. எனக்குத் தெரிய 5 வருமங்கள் வரமுன்பே கட்டிய காசும் போய் வாகனமும் பறிமுதலாகி நஞ்சிடமோ ஒரு முளக்காயித்திடமோ தஞ்சமடைஞ் சதைத்தான் கேட்டும் கண்டுமிருக்கிறன். அப்ப லீசிங்கில் வாங்கின நெஞ்சங்களென்னென்ன பாடுகளைப்பட்டி ருக்கும் சொல்லுங்க பாப்பம்.

## மூடப்பட்ட பப்படதொழிற்சாலையை மீளவும் இயங்க வைக்க கோரிக்கை



வவுனியா செட்டிகுளத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபப்பட தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில் உள்ளதாகவும் அதனை மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட பப்பட தொழிற்சாலை இயங்காது பாழடைந்து செல்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளத்தில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த குறித்தபப்பட தொழிற்சாலையை, அரசும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பும் இணைந்து பல கோடி ரூபா பெறுமதியில் உருவாக்கின.

ஆனால் இத் தொழிற்சாலை திறக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதியிலேயே மூடப்பட்டு விட்டது. இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர் யுவதிகள் தமது தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்.

செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இத் தொழிற்சாலையிலிருந்தே வவுனியா உட்பட வட பகுதிகளுக்கு பப்படம் விநியோகிக்கப்பட்டது.

இந்நிலையில் இத் தொழிற்சாலை மூடப்பட்டமையானது இப் பகுதிகளுக்கு ஏற்பட்ட பாரிய வருமான இழப்பாகவும் கருதப்ப டுகிறது.

எனவே, இத் தொழிற்சாலையை மீள இயங்கவைத்து இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு, செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த ஒளி விழா கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் கல்லூரியின் ஆ.சி.நடராஜா அரங்கில் ஆரம்பமாகி நடைபெற்றது.

ஆசிரியர் அருட்பணி இ.ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இவ் ஒளி விழா நிகழ்வில் அருட்தந்தை ஜே.யோான் மௌலிஸ் பிரதம விருந்தினராகவும், வடமாகாணக் கல்வியமைச்சர் த.குருகுலராஜா சிறப்பு விருந்தினராகவும், தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

புல்லாங்குழல் இசையுடன் இடம்பெற்ற விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தலைவர் உரை, அதிபர் வி.ரி.ஜயந்தன் ஆகியோரின் உரை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம், கரோல் கீத இசை, தூதர் நடனம், பலூன் நடனம், கோலாட்டம், ஆங்கில நாடகம், கிறிஸ்து பிறப்பு நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. குறித்த ஒளிவிழா நிகழ்வை நூற்றுக் கணக்கானோர் கண்டுகளித்தனர்.

## தானியஞ்சார் உற்பத்திகளை பிரபலப்படுத்த கருத்தரங்கு



தானியஞ்சார் உற்பத்திகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கிலான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கொன்றை நடத்த இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச்சபை முன்வந்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச்சபையானது எதிர்வரும் 25ஆம் திகதி இலக்கம் 615- காலி வீதி- கட்டுபெத்த- மொரட்டுவ என்ற முகவரியில் அமைந்துள்ள அபிவிருத்திச் சபை பிரதான காரியாலயத்தில் இப்பயிற்சிக் கருத்தரங்கை நடாத்தவுள்ளது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இப்பயிற்சிக் கருத்தரங்கில் சிறு மற்றும் மத்திய அளவிலான உற்பத்தியை மேற்கொள்ள தேவையான தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட வுள்ளது.

இக்கருத்தரங்கில் உடனடி இடியப்பமா தயாரிக்கும் முறை- ஈர மற்றும் காய்ந்த அரிசி மா தயாரிக்கும் முறை- தானிய மாக்கள் தயாரிக்கும் முறை போன்றவை தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கள் மேலதிக விபரங்களை 011 2605278 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது Info@idb.gov.lk என்ற மின்னஞ்சலூடாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் மோ.சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால் 2014ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டதற்கு அமைய பல்கலைக் கழகங்களில் கடமை புரியும் வெளிக்கள பணியாளர்களுக்கு மானிய விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

தகைமை பெறும் பணியளார் ஒருவர் மோட்டார் சைக்கிளை பெறுவதற்கு ரூபா ஐம்பதாயிரமும் ஸ்கூட்டர் ஒன்றினை பெறுவதற்கு ரூபா நாற்பத்தையாயிரத்தையும் செலுத்த வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக பதிவாளர் ஊடாக திரட்டிவருகின்றது.

(54)

38. பாரதி தமிழ் மகாவித்தியாலயம் 2013ஆம் ஆண்டு தனது வைரவிழாவை கொண்டாடியது எனின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1) 1963 2) 1953 3) 1945

❖ 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

39. இது மூன்று எழுத்துக்களை கொண்ட சொல்லாகும்
முதல் எழுத்து அவதியில் உண்டு அகதியில் இல்லை
இரண்டாம் எழுத்து சங்கத்தில் உண்டு தங்கத்தின் இல்லை ..............................
மூன்றாம் எழுத்து குருதியில் உண்டு குருவியில் இல்லை

40. இது நான்கு எழுத்துக்களை கொண்ட சொல்லாகும்
முதல் எழுத்து தகுதியில் உண்டு பகுதியில் இல்லை
இரண்டாம் எழுத்து கருவியில் உண்டு அருவியில் இல்லை ..............................
மூன்றாம் எழுத்து மரத்தில் உண்டு மறத்தில் இல்லை
நான்காம் எழுத்து செம்பில் உண்டு செப்பில் இல்லை


❖ நான்கு மாணவர்களை விரும்புகின்ற பழங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.


| ரகன் | டேவிட் | காமேஸ் | அமீன் |
|---|---|---|---|
| மாம்பழம் | ரம்புட்டான் | மாம்பழம் | அப்பிள் |
| பப்பாசிப்பழம் | கொய்யா | தோடை | மாம்பழம் |
| பலாப்பழம் | மாம்பழம் | கொய்யா | பலாப்பழம் |

41. நான்கு மாணவர்களும் விரும்புகின்ற பழம் எது?
1) அன்னாசி 2) மாம்பழம் 3) தோடை


42. டேவிட் விரும்புகின்ற காமேஸ் விரும்பாத பழம் எது?
1) தோடை 2) கொய்யா 3) அன்னாசி

43. தோட்டம் ஒன்றில் கத்தரி, தக்காளி, மிளகாய், செடிகள் மாறிமாறி நடப்பட்டன. முதலாவது கத்தரிச்செடி எனின் 25ஆவது செடி எது?
1) தக்காளி 2) கத்தரி 3) மிளகாய்

44.

உருவில் நிழற்றப்பட்ட பகுதி
1) 1/2இலும் கூடியது 2) 1/2இலும் குறைந்தது 3) 1/2க்கு சமன்

45.

இக்கட்டத்தில் அதிகளவில் இருப்பவை
1) சேவல்கள் 2) மீன்கள் 3) பறவைகள்

46. 1, 2, 3, 4, 5 ஆகியவற்றுக்கு முறையே ✡ ♦ ☼ ❖ ☺ என்னும் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன இதற்கேற்ப கணித செய்கையின் விடையாக அமைவது
- ☼☺♦
✡❖☺
1) ♦✡☺ 2) ♦✡✡ 3) ✡♦☼

47. □ ஐ இரண்டுதடவையும், ○ ஐ மூன்று தடவையும் △ ஐ நான்கு தடவையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உருவை தெரிவு செய்க


பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



தரம் -4 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



❖ 1 தொடக்கம் 47 வரையுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக

01. இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பிராணியை தெரிந்து கோடிடுக.
நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடிக்குமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடும்

1. 2. 3.

02. இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பறவையை தெரிந்து கோடிடுக.
ஒற்றுமையின் வலிமையை
உணர்ந்து வானில் கரைகிறாய்
வண்ணக்கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே

1. 2. 3.

❖ கோலத்திற்கு ஏற்ப..?.. இக்குறியினால் காட்டப்படும் இடத்திற்கு பொருத்தமான உருவை தெரிந்து கோடிடுக

03. [6843] → [7954] → எனின் KPNT →..?..
1) [PNKT] 2) [SRVT] 3) [LQOU]

04.


❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

05. அடர்ந்த காட்டில் எப்பொழுதும் இருப்பவை
1) மரங்கள், மிருகங்கள் 2) வீதிகள், மின்கம்பங்கள் 3) ஆறுகள், இலைசருகுகள்

06. கடலில் நிதமும் இருப்பவை
1) கப்பல், உப்பு 2) மீன்கள், நீர் 3) அலை, மீனவர்

07.
❖ 3 ☺
+ 1 ☺ ❖ = 2
7 5 □

இந்த கூட்டல் செய்கையின் படி 286 என்னும் எண்ணை எழுதும் முறை
1) □ ❖ 2) □ ☺ 3) ☺❖□

08.
✡ + ✠ = 16
✡ - ✠ = 2
✠ + ☼ = 10
☼ x ✡ = -?-


கணித செய்கையின்படி -?- இக்குறி இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1) 26 2) 21 3) 27

09. மார்ச்மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை எனின் மார்ச்மாதம் இறுதிநாள் என்ன கிழமை?
1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) புதன்கிழமை

10. நான் காலை வேளையில் கடற்கரை வழியே செல்லும் போது எனது இடது கைப்பக்கம் சூரியன் உதிப்பதை கண்டேன். நான் சென்ற திசை யாது?
1) மேற்கு 2) வடக்கு 3) தெற்கு

11. யமுனா தனது வீட்டில் இருந்து கிழக்கு நோக்கி 50m சென்று பின் தனது வலதுகை பக்கமாக திரும்பி 50m தூரம் சென்று பின் தனது இடது கைப்பக்கமாக திரும்பி 50m தூரம் சென்றாள். அவள் சென்ற பயணப்பாதையை காட்டும் உரு எது?

1) 2) 3)



12. பாடசாலை ஒன்றில் முதலாவது பாடவேளை மு.ப. 8மணிக்கு ஆரம்பமாகும். ஒவ்வொரு பாடமும் 45 நிமிடங்கள் நடைபெறும் மூன்றாவது பாடவேளை முடிவடையும் நேரம் யாது?

1) 10 மணி 15 நிமிடங்கள் 2) 10 மணி 3) 10மணி 30 நிமிடத்தில்

13.

| | | |
|---|---|---|
| ப | S | க |
| A | அ | வ |
| ம | K | J |

கட்டத்தில் அதிகளவில் இருப்பது

1) தமிழ் எழுத்துக்கள் 2) ஆங்கிலஎழுத்துக்கள் 3) எழுத்துக்கள்

14. இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் வாசிக்கும் போது ஓரே கருத்தை தரும் விடையை தெரிவு செய்க

1) குங்குமம் 2) விகடகவி 3) திருப்தி

15. கறுத்தப்பூனை சிறிய எலியை துரத்திப்பிடித்தது. இவ்வாக்கியத்தில் உள்ள செயற்படுபொருள் எது?

1) கறுத்தப்பூனை 2) எலியை 3) துரத்திப்

16. 

உருவில் உள்ள தொழிலாளிக்கு தேவையான உபகரணம்

1) கத்தி 2) சீவுளி 3) கரப்பு

17.

| | | |
|---|---|---|
| வி | | தி |
| | க | |
| த | | பி |

சொற்கூட்டத்தில் வெற்றுக்கூட்டில் இரண்டு எழுத்துக்களை எழுதுவதன் மூலம் மூன்று சொற்களை உருவாக்க முடியும். இவ்விரண்டு எழுத்துக்களையும் குறிக்கும் விடையை தெரிந்து கோடிடுக.

1) யா,ம் 2) க,சி 3) கு,ம

❖18 தொடக்கம் 20 வரையான வினாக்களில் புள்ளிக்கோட்டுக்குரிய சொல்லின் கீழ் கோடிடுக

18. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல குதிரை ......................................

1) கத்தும் 2) பிளிறும் 3) கனைக்கும்

19. பாரதியார் கவிஞர் என்பதை போல டாவின்சி ......................................

1) விகடகவி 2) பாடகர் 3) ஓவியர்

20. யானையின் ஆண் களிறு போல நண்டின் ஆண் ......................................

1) கடுவன் 2) அலவன் 3) ஓரி


● + ● = 26 எனவும் ■ - 4 = ● எனவும் ■ + ● = ✡ எனவும் தரப்பட்டுள்ளது

21. ■ இதற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

1) 9 2) 17 3) 12

22. ✡ இதற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

1) 20 2) 30 3) 18

23. 

உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

1) 12 2) 13 3) 10

24. 1kg பயறும் 1kg கடலையும் வாங்கத்தேவையான பணம் ரூபா 196 எனின் 2kg பயறும் 2kg கடலையும் வாங்கத்தேவையான பணத்தொகை யாது?

1) 392.00 2) 369.00 3) 385.00




25. எனது வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் ஆரணி ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் ஆகவே ஆரணி எமது வகுப்பு மாணவி என்பது?


1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

26. நிமலின் வயதை போல மூன்று மடங்கு அவன் தாயின் வயது அதன் படி அவர்கள் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகையாய் இருக்கக்கூடியது?

1) 48 2) 43 3) 46

27. தரப்பட்ட கம்பித்துண்டை A.B.C.D.E என்னும் இடங்களில் மடிப்பதன் மூலம் உருவாக்கக்கூடிய வடிவத்தை தெரிக





28. 

இக்குறியீடு குறிப்பது

1) மீள்சுழற்சிக்கு உட்படக்கூடியது
2) கட்டாயசுற்றுவட்டம்
3) நொருங்கக்கூடியது

❖நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்த நேரங்களை நான்கு கடிகாரமுகங்கள் காட்டுகின்றன. அதன் உதவியுடன் வினாக்களுக்குரிய விடையை தெரிக




29. பாடசாலைக்கு முதலில் வருகை தந்தவர் யார்?

1) இமானா 2) மேரி 3) பரிஹா

30. நிரோஷா வருகை தந்து எவ்வளவு நேரத்தின் பின்னர் இமானா பாடசாலைக்கு வந்தார்?

1) 25 நிமிடங்களில் 2) 15 நிமிடங்களில் 3) 20 நிமிடங்களில்

31. தகரப்பேணியுடன் பால்மாவின் நிறை 1Kg ஆகும். அதிலிருந்து அரைவாசி பால்மாவை வெளியே எடுத்த பின் நிறுத்தும் போது நிறை 600g ஆகும். வெற்றுத்தகரப்பேணியில் நிறை யாது?

1) 200g 2) 400g 3) 100g

❖பின்வரும் வினாக்களில் தடித்தஎழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத்தரும் விடையை தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

32. பெரியார் கூறும் புத்திமதிகளை நாம் ஒரு போதும் உதாசீனம் செய்யக்கூடாது


1) அறிவுரை, அலட்சியம் 2) அனுபவம், தீமை 3) அறிவு, அசுத்தம்

33. பழமை வாய்ந்த கட்டங்கள் இடிபாடு அடைந்துள்ளன

1) புதுமை, சண்டை 2) புராதனம், உறுதி 3) தொன்மை, சிதைவு

34. அண்மையில் உள்ள துறைமுகத்தில் மாலுமி கப்பலை நங்கூமிட்டார்

1) பக்கத்தில், பாகன் 2) தொலைவில், சாரதி 3) அருகில், மீகாமன்


35. 

நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு 12cm எனின் முழு உருவின் சுற்றளவு யாது?

1) 48cm 2) 36cm 3) 32cm

36. இன்று ஞாயிற்றுக்கிழமை நேற்றைக்கு முதல் நாளுக்கும் கடந்த திங்கட்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் உள்ளன?

1) 2 2) 4 3) 3

37. 


வெற்று வட்டத்திற்கு வரவேண்டிய இலக்கம் யாது?

1) 9 2) 8 3) 6

# முல்லையில் காலடி பதிப்பதற்கு சயந்தனுக்கு அனுமதி மறுக்கப்படும்

## எச்சரித்தார் அன்ரனி ஜெகநாதன்



(யாழ்ப்பாணம்)

மீன்பிடி சமூகமான எனது சமூகத்தை ஒதுக்கிவிட்டு தவறானதைச் சொல்லி கூட்டுறவு ஆலோசனை குழு என சிலரை தெரிவு செய்துள்ளார் சயந்தன்.

எங்களை அவமதித்ததால் அவரை எங்கள் எல்லைக்குள் வரவிடமாட்டோம் அப்படித் தைரிய மானவர்கள் நாங்கள் எங்களை மடையன் பேயனாக்க முடியாது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதிநிதி சயந்தனா? அல்லது நாங்களா? இது தெளிவு படுத்த வேண்டும் இல்லாது விட்ப்பட நாங்கள் வேறு வேலைகள் செய்ய வேண்டி வரும் நாங்கள் நால்வரும் தகைமையற்றவர்கள் என சொல்லுங்கள் நாங்கள் பதவியை விட்டு போகிறோம் என எச் சரிக்கும் தொனியில் தெரிவித் தார். வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடமாகாண சபை அமர்வின் போது அவர் இவ்வாறு சயந் தன் மீதும் முதலமைச்சர் மீதும் கடிந்து கொண்டார்.

எங்களது கடிதத்தை தூக்கி எறிந்து விட்டு முல்லைக்கு வந்த சயந்தன் சிலருடன் கதைத்துவிட்டு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திற்கு தான் விரும்பிய மூவரை நியமித்துவிட்டு போயுள்ளார்.

18 வருடமாக திருமலையில் வசிக்கின்றவரையும் மனநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவரையும் நியமிக்கப்பட்டிருந்தது. இது எல்லாம் சயந்தனின் விளையாட்டு. இதை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

இதற்கு முதலமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும். இது தான் இங்கு நடக்கிற கூத்துக்கள்.

அமைச்சுப் பொறுப்பில் முதலமைச்சர் இருக்கிறார்.. வேறு ஒருவர் நடத்துகிறார். அவர் முல்லைத்தீவுக்கு வருகிறார் ஆட்களை விரும்பியபடி போட்டு விட்டு போகிறார். நாங்கள் 4 விசரங்கள் இங்கு வந்து சும்மா வந்து போகிறோம்.

இதற்கு முதலமைச்சர்தான் பொறுப்புக் கூற வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை உங்களுக்கு நிபுணத்துவக் குழு உதவி வேண்டும் என்றால் அதற்கான ஒழுங்கைச் செய்யுங்கள் வடமாகாண சபை உறுப்பினர்களின் அங்கத்துவம் இல்லாது அமைக்கபப்ட்ட சயந்தனின் குழுவை இரத்துச் செய்ய வேண்டும்.

சயந்தனுக்கு வேண்டும் என்றால் தனிப்பட்ட முறையில் அக்குழுவை வைத்திருக்கட்டும் வடமாகாண சபைக்கு தேவையில்லை என சீறிப்பாய்ந்தார் சிவமோகன். (இ)

# நூல்கள் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

கோண்டாவில், அனலைதீவு ஆகிய பொது நூலகங்களுக்கு யாழ். இந்திய துணைத் தூதரகத்தினால் ஒருதொகுதி புத்தகங்கள். அன்பளிப்பு செய்யப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கோண்டாவில் பொது நூலகர் திருமதி கே.அனிதா, அனலைதீவு பொது நூலகர் திருமதி எஸ்.தர்மிலா ஆகியோரிடம் புத்தகத் தொகுதிகளை இந்திய துணைத். தூதரக பிரதித் தூதர் எஸ்.டி. மூர்த்தி வழங்கி வைத்தர்ர்.

இலங்கை அரசு ஊடாக சிறந்த நூலகங்களுக்கான விருதுபெற்ற நூலகங்களுக்கு இந்திய துணைத்தூதரகம் புத்தகங்களை அன்பளிப்பு செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# வருமான வரி செலுத்துபவர்களின் விபரங்களை சமர்ப்பிக்க உத்தரவு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வருமான வரி செலுத்துபவர்கள் 2013-2014ஆம் ஆண்டுக்குரிய வரி விபரத்திரட்டுக்களை, எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என, உள்நாட்டு இறைவரி திணைக்கள யாழ். பிராந்திய அலுவலக பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி.சு.சர்வேஸ்வரன் கடந்த செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்கள் யாழ்ப்பாண அலுவலகத்தில் வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்கலாம்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், எதிர்வரும் 29ஆம் திகதி கிளிநொச்சி பழைய மாவட்ட செய்லக கட்டத்தொகுதி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள, விசேட கருமபீடத்தில் வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க முடியும்.

அத்துடன், இதுவரை காலமும் ஏனைய பிராந்திய அலுவலகத்திலோ, கொழும்பு காரியாலயத்திலோ வரி கோவைகளை பேணுபவர்களும் வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க முடியும்.

வரி விபரத்திரட்டுக்களுடன் அதனை பூரணப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எடுத்து வரவேண்டும்.

அத்துடன், முன்னைய வருடங்களுக்குரிய வருமானவரி விபரத்திரட்டுக்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விபரத்திரட்டுக்கள் ஆகியவை சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றையும் சமர்ப்பித்துக் கொள்ள முடியும என்று தெரிவித்தார்.

புதிய வரிக்கோவைகள் திறக்க விரும்புவோர், வரிதொடரபான விளக்கங்கள் பெற விரும்புவோரும் யாழ் அலுவலகம், மற்றும் விசேட கரும பீடங்களுக்கு சமூகமளித்து விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புகையிரத நிலையத்திற்கு அருகில் நிழற்குடை அமைக்க கோரிக்கை

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் பயணிகள் நிழற்குடை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் செல்லும் வரணிப் பகுதி மக்கள், கொடிகாமம் மந்துவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கொடிகாமம் ஏ-9 வீதியில் உள்ள பஸ்தரிப் பிடத்தையே பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் பயணிகள் நிழற்குடை இல்லாது மழை வெயில் காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பேருந்துகள் இவ் பஸ்தரிப்பிடத்திலேயே நின்று செல்வதாகவும் யாழ்ப்பாணம் செல்ல இவ் பஸ்தரிப்பிடமே முக்கியமாக உள்ளதாகவும் மேலும் தெரிவிக் கின்றனர்.

எனவே கொடிகாமப் பகுதி மக்கள் மாணவர்களின் நன்மை கருதி கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் பயணிகள் நிழற்குடையை அமைத்து தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையின் புதிய மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மத்திய தலைவன் நூல் வெளியீடும் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் சிரேஸ்ட மாணவ முதல்வன் ரி.சபேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்க்கு பிரதம விருந்தினராக பண்டாரநாயக்கா விமான நிலைய குடிவரவு திணைக்கள உத்தியோகத்தரும் மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல் வருமாகிய ஆர்.ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கல்லூரி யின் முன்னாள் மாணவ முதல்வர் சபை பொறுப்பாசிரியர் என்.அனந்தசயனன் மற்றும் கல்லூரி முதல்வர் எஸ்.கே. எழில்வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மத்திய தலைவன் நூலும் வெளியிடப்பட்டது

மத்திய தலைவன் நூலுக்கான வெளியீட்டு உரையினை பழையமாணவான் ஜங்கரன் நிகழ்த்தினார். கலை நிகழ்வுகளாக மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் பட்டிமன்ற நிகழ்வும் மத்திய கல்லூரி நாடக மன்ற மாணவர்களின் தயாரிப்பில் நாடகமன்ற பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரனின் நெறியாள்கையில் பண்படுவோம் நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது (63).



பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் 6 கிளை முன்பள்ளிகள் இணைந்து நடாத்திய முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றபோது.


# கட்டை பறிச்சான் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட இராமாவில் சந்தியில் இருந்து கொடிகாமம் கட்டை பறிச்சான் இந்து மயானத்திற்கு செல்லும் 1 கிலோமீற்றர் நீளமான வீதி பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இராமவில் கொடிகாமம் வடக்கு மந்துவில் வடக்கு தாவளை இயற்றாலை, மீசாலை வடக்கு முதலான கிராமங்களை சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் இவ் வீதியானது தற்போது கிடங்குகள் உள்ள பகுதியாக நீர் தேங்கி நிற்கின்றது. இப்பகுதிகளைச் சேர்ந் தவர்கள் கொடிகாமம் சந்தைக்கு செல்வதற்கு இவ்வீதியினையே பயன்படுத்துகின்றனர்.

கொடிகாமம் இந்து மயானத்திற்கு செல்வதற்கும் இவ்வீதியே பயன்படுவதாகவும் மழைவெள்ளத்தால் இவ்வீதியால் வாகனங்கள் பயணிக்க முடியாமல் இருப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்களின் நன்மை கருதி கொடிகாமம் கட் டைப்பறிச்சான் வீதியினை திருத்தி தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். (14)

# அமெரிக்காவில் குடியேறிய 4.50 இலட்சம் இந்தியர்கள்




அமெரிக்காவின் பல மாகாணங்களிலும் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினரில் 4.50 லட்சம் பேர் இந்தியர்கள் என்று ஒரு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு இடைவெளியில் மெக்சிக்கோவிலிருந்து சட்டவிரோதமாக இடம் பெயர்ந்து வருவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும், அதேசமயம், 2012ஆம் ஆண்டின்படி அமெரிக்காவில் ,சட்டவிரோதமாக இடம் பெயர்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை 1.12 கோடியாக இருந்தது என்றும் தெரிவிக்கப்ட்டுள்ளது. இந்த எண்ணிக்கை தற்போது அதே அளவில் உள்ளது.

இன்டியானாவில் உள்ள சட்டவிரோத இந்தியர்களின் எண்ணிக்கை 4 சதவீதமாக உள்ளது. இரண்டாவது சட்டவிரோத குடியேறிகளாக இந்தியர்கள் உள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்படுகிறது.

# 4 கைகள் கால்களுடன் பிறந்த அதிசய குழந்தை



மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பருய்பூர் கிராமத்தில் நான்கு கைகள் மற்றும் கால்களுடன் அதிசய குழந்தை பிறந்துள்ளது. இது குறித்து கேள்விப்பட்ட அப்பகுதி மக்கள் இது கடவுளின் குழந்தை என்று கூறி, குழந்தையைப் பார்க்க திரளாக வந்த வண்ணம் உள்ளனர். குழந்தையை பார்க்க மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் திணறிவருகின்றனர். கடவுளின் அவதாரத்தில் தான் பல கைகளும், கால்களும் இருக்கும் என்று நம்பப்படுவதால், இக்குழந்தையும் கடவுளின் குழந்தை என்று அப்பகுதி மக்களால் கருதப்படுகிறது.

# இந்தியா வந்த இளைஞருக்கு எபோலா நோயுள்ளது

லைபீரியாவில் இருந்து இந்தியா திரும்பிய ஒருவர் எபோலா வைரஸினால் பாதிக்கப்பட்டிருப்பது மருத்துவ சோதனையில் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லைபீரியாவில் இருந்து தாயகம் திரும்பிய இந்திய இளைஞருக்கு எபோலா வைரஸ் நோய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10அம் திகதி டில்லி வந்த அந்த இளைஞரின் இரத்த பரிசோதனையில் நடாத்தப்பட்ட ஆய்வில் எபோலோ வைரஸ் நோய்க்கான அறிகுறிகள் தென்படவில்லை.


இருப்பினும் அவரது விந்தணு மாதிரிகளை சோதனை செய்ததில், அவர் எபோலாவினால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து அவரை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியா திரும்பியுள்ள அந்த இளைஞர் எபோலா வைரசினால் பாதிக்கப்பட்டு லைபீரியாவில் சிகிச்சை பெற்றுள்ளார். பூரண குணமாகிவிட்டதாக அந்நாட்டில் சான்றிதழ் அளிக்கப்பட்ட நிலையில் அவர் இந்தியா திரும்பியுள்ளார்.

இவ்விவகாரத்தில் மத்திய அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருவதாக கூறியுள்ள மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா இது குறித்து பொது மக்கள் யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# விண்வெளியில் சுற்றும் செயற்கைக்கோள் ரஷ்யா ஏவியிருக்க வாய்ப்புள்ளதாக சந்தேகம்



(வோஷிங்டன்)

விண்வெளியில் சுற்றி வரும் மர்ம செயற்கைக்கோளை ரஷ்யா ஏவியிருக்கலாம் என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எதிரிநாட்டு ஏவுகணைகளை அழிக்கும் பணியில் இது ஈடுபடலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. விண்வெளியில் ஒரு மர்ம செயற்கைக்கோள் சுற்றி வருவது சர்வதேச விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதற்கு 'ஆப்ஜெக்ட் 201428 இ- என பெயரிடப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் இந்த செயற்கைக்கோள் தெற்கு பசுபிக் பெருங்கடல் பகுதிக்கு மேலே அவுஸ்ரேலியா தென்அமெரிக்கா இடையே இருந்தது. இந்த செயற்கைக்கோள் கடந்த மே மாதம் ஏவப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. ஆனால், இந்த ரகசிய செயற்கைக்கோள் பற்றி எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. முதலில் இது செயல் இழந்த செயற்கைக் கோளாக இருக்கலாம் என கருதப்பட்டது. ஆனால், அதன் செயற்பாடு குழப்பமாக இருந்ததால், அது புதிய செயற்கைக் கோள் என அமெரிக்கா கண்டறிந்தது. கடந்த வாரம் இந்த செயற்கைக்கோள் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி சென்றது.

# அமெரிக்கா-ரஷ்ய உறவு சுமுகமாக அமைய வேண்டும்




உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்கா, ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

இந்த நிலையில் ரஷ்யாவின் புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டு உள்ள கான் டிப்டுக்கு சான்று வழங்கும் விழா நடை பெற்றது இதில் கலந்து கொண்டு ரஷ்ய அதிபர் புடின் பேசும் போது கூறியதாவது:-

ரஷ்யா அமெரிக்காவுடன் பல்வேறு துறைகளில் நடைமுறையான ஒத்துழைப்புக்கு தயாராகவுள்ளது. அந்த ஒத்துழைப்புகள், ஒருவர் மற்றொருவர் நலனகள் மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற வகையில் அமைய வேண்டும். என்றார்.

# இந்திராகாந்தி விருதுக்கு தேர்வாகியது இஸ்ரோ



2014ஆம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருதுக்கு, இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

உலக அளவில் அமைதியை ஏற்படுத்தும் பணிகளில் சிறந்த பங்களிப்பை அளிப்போருக்கு ஆண்டுதோறும் இந்திரா காந்தி அமைதி, ஆயுத ஒழிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான விருது வழங்கப்படுகிறது. ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் கோபி அனான், ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் ஹமீட் கர்சாய் ஆகியோர் இந்த விருது பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அந்த வகையில் 2014ஆம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருதுக்கு இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இதற்கான அறிவிப்பை துணை ஜனாதிபதி ஹமீட் அன்சாரி தலைமையிலான விருது தேர்வுக்குழு வெளியிட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 80 இலட்சம் டொலர்

கோழிக்கறி விசமானதால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 80 இலட்சம் டொலர் இழப்பீடு வ்ழங்க வேண்டுமென கே.எப்.சி. நிறுவனத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் பிரபல கோழிக்கறி நிறுவனமான கே.எப்.சி.க்கு, உலகம் முழுவதும் கிளைகள் உள்ளன. கடந்த 2005ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரத்தில் உள்ள கே.எப்.சி நிறுவன கிளையில் இருந்துவாங்கி உண்ட கோழிக்கறி விஷமாகியுள்ளது. இந்தக் கறியை சாப்பிட்ட மோனிகாவுக்கு உடல் நிலை பாதித்து, ஆறு மாதம் கோமா நிலைக்கு சென்றதுடன் அதன் பின் அவளது கை, கால்கள் முடங்கிப்போயின. விஷமாகி போன கோழிக்கறியை சாப்பிட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து கே.எப்.சி நிறுவனத்தின் மீது, மோனிகாவின் பெற்றோர் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், அவளுக்கு இழப்பீடு அளிக்கும் படி உத்தரவிட்டது. இந்த தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாகவும், இதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாகவும் கே.எப்.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவில் பனிப்பொழிவு 50 மாகாணங்கள் பாதிப்பு



அமெரிக்காவில் கடுமையான பனிப்பொழிவால் 50 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. நியூயோர்க்கில் மட்டும் 4 பேர் பலியாகியுள்ளனர். அமெரிக்காவின் பல மாகாணங்களில் அதிக பட்ச வெப்பநிலை 30 டிகிரி ∴பாரன்ஹீட்க்கும் கீழ் உள்ளது. இதனால் ஹவாய் மாகாணம் உட்பட மொத்தம் 50 மாகாணங்கள் பனியால் உறைந்துள்ளன. பவ்லோ மாகாணத்தை தாக்கிய பனிப் புயலைத் தொடந்து கடந்த ஒரு வாரமாக 50 மாகாணங்களில் கடுமையான பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது.

# வார்சோ பல்கலைக்கழகத்துக்கு பௌத்த நூல்கள் அன்பளிப்பு



பௌத்த மதம் மற்றும் மதம் பற்றிய தத்துவ விளக்கங்கள் மேற்கத்தைய பௌத்த மதத்தினை சாராத வேற்று மதத்தினையுடைய ஆராய்ச்சியாளர்களிடையே அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக வார்சோ பல்கலைக்கழகத்துக்கு இலங்கைத் தூதரகத்திகால் பௌத்த மத நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மானிடவியல், சமூகவியல், தத்துவவியல், பாடங்களை கற்று வருகின்ற போலந்தின் வோர்சோ நகர கலைமாணி மற்றும் பட்டதாரி மாணவர்களது வேண்டுகோளுக்கிணங்கவே இலங்கைத் தூதரகத்தினால் இவ்வாறான முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஜெனிவா சர்வதேச பௌத்த அறக்கட்டளை தலைவரும் , பாலி பௌத்தமத முதுகலைமாணி ...ற்கை நெறித் தலைவருமான விமலரத்ன தேரர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பௌத்த மதம் தொடர்பான 50இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் வோர்சோ பல்கலைக்கழக பிரதான நூலகத்துக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் போலந்துக்கான இலங்கைத் தூதுவர் டி.எஸ்.டி சில்வா, பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் ஜொலன்ரா சியாராக் கொவாஸ்காவுடனான கலந்துரையாடல் ஒன்றிலும் ஈடுபட்டுள்ளார்.

அதன்போது இப்பல்கலைக்கழக கல்வி தொடர்பில் பல திட்டங்களும் கலந்துரையாடப்பட்டன. அதன்போது இலங்கை பல்கலைக்கழகங்களுக்கும் வார்சோ பல்கலைக்கழகத்துக்கும் இடையில் மாணவர்களை, விரிவுரையாளர்களை பரிமாற்றம் செய்வதனைப்பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இவ்வாறான திட்டத்தினை சியாராக்கொவாஸ்கா முன்வைத்ததுடன், இரு அரசாங்களும் இவ்வாறான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. கைச்சாத்திடுவதற்கான ஒப்பந்தமானது "மாணவர்களிடையே கலாசார, கல்வி, விஞ்ஞான திட்டங்களை விரிவுபடுத்தும் திட்டமாகும். மேலும் இது தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகமும் வார்சோ பல்கலைக்கழகமும் இணைந்து கைச்சாத்திடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வங்கிக்கடனை மீளச்செலுத்தாதோர் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியில் கடன் பெற்று அதனை கிரமமாக மீளச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வங்கி தயாராகி வருவதாக வங்கியின் வடபிராந்திர செயற்பாட்டு முகாமையாளர் எஸ். என். மாணிக்கசிங்கி தொவித்துள்ளார்.

வங்கியில் கடன் பெற்றுக்கொண்டவர்கள் உரியதிட்டமிடலுடன் முதலீட்டிற்கு பணத்தினை பயன்படுத்தினால் அதில் வரும் வருமானத்தின்மூலம் கடனை உரிய காலத்தில் மீள செலுத்தியிருக்க முடியும்,

ஆனால் கடன் பெற்றவர்கள் அவ்வாறு பயனுள்ளவகையில் முதலீட்டினை மேற்கொள்ளாது வேறுவகையில் ஆடம் பரமான செலவுகளை செய்துள்ளனர்.

இதனால் கடனை மீள செலுத்த முடியாது திணறுகின்றனர்.

வங்கியில் வைப்பினை மேற்கொள்பவர்களின் பணத்தினையே கடனாக வழங்கிவருகின்றன.

இவ்வாறு ஊதாரித்தனமாக செலவு செய்து விட்டு கடனைமீள செலுத்தாது உள்ளவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றது

அதற்கமைய அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு வங்கி தள்ளப்பட்டுள்ளது. ஆயினும் வாடிக்கையாளர்களை நாம் இயன்றளவு அனுகி கடனை அறவிட நடவடிக்கை எடுத்தும் வருகின்றோம்.

கடன் பெற்றவர்கள் நிலுவை தொகையினை செலுத்தமுடியாத விடத்து வங்கிகளுடன் தொடர்பு கொண்டு கையில் உள்ள பணத்தினை செலுத்தி மீள செலுத்தும் காலத்தினை நீடித்ததுக் கொள்ள முடியும் என்றார். (54)

# கிளிநொச்சியில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவட்ட கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளதாக அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இணைத் தலைவர்களான பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. சென்ற யூன் மாதத்தின் பின்னர் தற்போது இக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் வட மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தியதும் தெரிவித்தது. (90)

## மரண...

வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அதேவேளை,இந்திய மீனவர்களுக்கு மரண தண்டனையிலிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பொது மன்னிப்பு வழங்கியதுபோல், அதேவகையான குற்றச்சாட்டில் ஒரே மாதிரியான தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் எங்களது பிள்ளைகளையும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டுமென போதைப் பொருள் கடத்தலில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளோரின் மனைவிமார், பிள்ளைகள், பெற்றோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கைவிடுத்தனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சிறைச்சாலை பகுதியிலிருந்து நகர்ப்பகுதி வழியாக ஊர்வலமாக வந்த குருநகர் மக்கள் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு வருகை தந்து மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள தமது கணவன்மாரை கருணை அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியை கோரும் மகஜர் ஒன்றினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக வழங்குவதற்காக கையளித்தனர்.

தற்போது வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தற்சமயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் இருக்கின்றார். ஆகவே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசாவும் ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக் கொண்டனர்.

மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்கரர்களுடன் தொலைபேசி வாயிலாக உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கெனவே மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமக்கு பெற்றோர் வழங்கிய கோரிக்கை மகஜர் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இருப்பதாகவும், உங்களது கோரிக்கையை பெருமளவானவர்கள் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்துவார்களாக இருந்தால் உங்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களும், குருநகரைச் சேர்ந்த மூன்று இலங்கை மீனவர்களுமான எட்டுப் பேருக்கு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்களில் ஐந்து இந்திய மீனவர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மழை...

மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் கடும் காற்றுடன் மழைபெய்யுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (பா)

## வேட்புமனு...

45 முதல் 65 தினத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கு மாறு கோரும் வர்த்தமானி அறிவித்தல் ஆவணம் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது..

## புலிகளின்...

மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள இந்திமடு, சமளன்குளம் ஆகிய இடங்களை நீதவான் சென்று பார்வையிட்டார்.

நீதவானுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் குழுவும் சென்றிருந்தது.

பொலிஸ் ஆய்வாளர் ஜெயரட்ணம் உள்ளிட்ட 80 படையினர் மற்றும் பொலிஸார் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட தாக கூறப்படும் இடத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே நீதவான் அவ்விடத்திற்கு சென்றுள் ளார்.

கல்கிசை பொலிஸ்நிலைய புலனாய்வுப் பொறுப்பதிகாரியான ஆய்வாளர் பி.ஜெயரட்ணம் உள்ளிட்ட 80 படையினர் மற்றும் பொலிஸார், ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் வைத்து, விடு தலைப புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அவர்களின் சடலங்கள் பழைய ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதாக, விடுதலைப் புலிகளின் முன் னாள் போராளிகள் தகவல் வெளியிட்டிருந்தனர்.

## ஜனாதிபதி...

வெளியுறவுத் துறை உயரதிகாரி கூறியதாவது கொழும்புக்கு வர வேண்டும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடுத்த அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்துக்கான திகதியை இறுதி செய்வதற்காக பரஸ்பரம் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்போ, பின்போ பிரதமரின் கொழும்பு பயணம் இருக்கும். அத்துடன் இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசும் வாய்ப்பும் ஆராயப்படுகிறது என்றார் அவர்.

இலங்கையுடன் வர்த்தகம், தொழில், கலாசார உறவுகளை மேம்படுத்துவதிலும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வுத் திட்டங்களை உருவாக்கும் நடவடிக்கைகளிலும் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதுபோன்ற செயல்கள், அண்டை நாடுகளுடன் வழக்கமாக இந்தியா வைத்துள்ள நல்லுறவின் அடையாளமாகும்.

மோடியின் கொழும்பு பயணம் இந்த இலக்குகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## காங்கேசன்..

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை புனரமைத்து மீள இயக்கும் வகையில் முதற்கட்டமாக அரைத்து பொதியிடல் செய்வதற்கும், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை நவீனபடுத்தி உற்பத்தியை மேம்படுத் துவதற்குமான திட்டங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது வட மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை அவர்களைச் சார்ந்து வாழும் குடும்பங்களது வாழ்வாதாரமும், பொருளாதாரமும் மென்மேலும் முன்னேற்றமடையுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே குறிப்பிட்ட தொழிற்சாலைகளின் தொழிற்துறை நடவடிக்கைகள், சூழல் மாசடையாதவாறு நவீன தொழில் நுட்பங்களூடாக திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்

## ஜனாதிபதித்...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் மகிந்த ராஜபக்ஸ தனது இரண்டாம் தவணைக்கான பதவிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் எஞ்சியுள்ள நிலையிலேயே இப்போது தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மற்றும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெயரிடப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் அரச அச்சகம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, ஜனாதிபதி தேர்தல் நடாத்துவதற்கான திகதியை நிர்ணயிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சந்திரிக்காவுடன் மனோ சந்திப்பு
# எதிரணியின் தேர்தல் வியூகம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனுக்கும் இடையிலான ஒரு முக்கிய சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில், ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவர் வேலுகுமார், உபசெயலாளர் சண் குகவரதன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன ஆகியோரும் கட்சி தலைவர் மனோ கணேசனுடன் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு பற்றி ஊடகங்களுக்கு மனோ கணேசன் தெரிவித்தாவது,

சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திலும், அதை தொடர்ந்த இடைக்கால ஆட்சியமைப்பிலும், எதிர்கால அரசமைப்பிலும் முக்கிய பாத்திரம் வகிப்பார் என்ற உறுதியை அவரிடம் இருந்து நேரடியாக பெற்றுக் கொள்ளவே நாம் இந்த சந்திப்பில் கலந்துகொண்டோம்.

உட்கட்சி பிரச்சினைகளிலும், தனிநபர்களின் நிகழ்ச்சி நிரல்களிலும் சிக்குண்டு தோல்வியடையக்கூடிய ஒரு தேர்தலில் பங்குபெற ஜனநாயக மக்கள் முன்னணி தயாரில்லை என நான் அவரிடம் தெரிவித்தேன். அந்த நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாக தெரிவித்த அவர்,


வெற்றியடையக்கூடிய தனது மாற்று யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையினாலேயே தாம் இதில் பங்களிக்க முன் வந்துள்ளதாக எம்மிடம் தெரி வித்தார். இந்நிலையில் சந்திப்பு மிகவும் திருப்திகரமாக நடை பெற்றது. நேற்று நான் ஊடக மாநாட்டில் சொன்னது போல், இந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முற்போக்கு அணியும், ஏனைய அனைத்து கட்சிகளுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்பாகவும், குறிப்பாக தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகவும் ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமான நிலைப்பாடுகளை கொண்ட சந்திரிகா, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முற்போக்கு அணியை பொது எதிரணியுடன் கொண்டு சேர்ப்பதில் தலைமை பாத்திரம் வகிக்க உறுதி பூண்டுள்ளார் என்பது தெளிவாக, நமது இன்றைய கலந்துரையாடலில் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

எதிரணி பொது வேட்பாளர். யாரென அதிகாரப்பூர்வமற்ற முறையில் முடிவு செய்யப்பட்டு விட்டது. அதுபற்றிய கருத்து பரிமாற்றங்களுக்கு இனி இடமில்லை. பொது வேட்பாளர் யாரென இப்போது பகிரங்கமாக அறிவிக்க முடியாது. நிச்சயமாக வெற்றி பெற்று இந்நாட்டிலே நல்லாட்சியை நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கையை நமக்கு தரக்கூடிய வேட்பாளராக அவர் இருக்கின்றார் என்பதை இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இதுபற்றிய நாளை நடைபெறும் எதிரணி கட்சி தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் அது அதிகாரப்பூர்வமாக நாட்டுக்கு அறிவிக்கப்படும்.

## மணல்கடத்த முயன்றவேளை மாம்பழம் சந்தியில் இருவர் கைது



சட்டவிரோதமான முறையில் மணல்கொண்டு சென்ற உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் யாழ்.பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

யாழ்.மாம்பழச் சந்தி பகுதியில் நேற்றுக்காலை யாழ்பொலிஸார் மணலுடன் வந்த டிராக்ரரை மறித்து சோதனை இட்டதுடன் சாரதியையும் கைது செய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இவர்கைது செய்யப்பட்டதாகவும் உழவு இயந்திரமும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸார் விசாரணையின் பின்னர் நேற்று அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ.25)

## சிறுவன் மீட்பு

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தச்சடம்பன் கிராமத்தில் நேற்று முன்தினம் காணாமற்போன மூன்று சிறுவர்களில் ஒருவரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தச்சடம்பன் கிராமத்தை அண்மித்த காட்டுப் பகுதியிலிருந்து குறித்த சிறுவன் நேற்று முற்பகல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்குச் செல்வதாக கூறி வீட்டிலிருந்து நேற்று காலை புறப்பட்ட மூன்று சிறுவர்களும் காட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஏனைய இரண்டு சிறார்களும் குறித்த காட்டுப் பகுதிக்குள் பதுங்கியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மீட்கப்பட்ட சிறுவனிடம் வாக்குமூலம் பதிவு செய்ததன் பின்னர் சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காட்டுக்குள் பதுங்கியுள்ள ஏனைய இரண்டு சிறுவர்களையும் மீட்கும் பணிகளுடன், மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வெளிப்படை தன்மையாக திட்டங்கள் முன்நகருகின்றன

### உறுப்பினர் ந.பி.இராஜ்குமார் எடுத்துரைப்பு

(வலி.மேற்கு)

வலி.மேற்கு அபிவிருத்திக்கு தவிசாளர் திருமதி ஐங்கரன் கைகொடுத்து உதவுகிறார் எனினும் ஆலய அபிவிருத்திகள் இரு துருவங்களுமாக உள்ள ஆ.ஜீவன் உறுப்பினர் நடனேந்திரனும் இல்லாவிடில் எவ்வித திட்டங்களும் முன்னுக்கு வராது. அவையாவும் கைநழுவி போய் விடும்.

இவ்வாறு கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் ந.பி.இராஜ்குமார் தெரிவித்தார்

சங்கானை மக்களுக்கு காணி பகிர்ந்து வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கூட்டமைப்பு உறுப்பினர் ந.பி.இராஜ் குமார் மேலும் பேசுகையில்,

யாழ்மாவட்டத்தில் வலி.மேற்கு பிரதேசசபை வெளிப்படை தன்மையுடன் இயங்குகின்றது.

இன்று சங்கானை மக்களுக்கு காணி வழங்கப்படு கின்றது. இன்னும் சில காலங்களில் அராலி ஊரத்தி மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகளுக்கு முந்திய கருவியாக உள்ளது எமது கௌரவ சபையே. இச் சபையின் செயற்பாட்டிற்கு தலைவரும்-செயலாளரும் உத்தியோகத்தர்களும் உறுப்பினர்களும் பாடுபடுகின்றனர்.

எனினும் வலி.மேற்கில் இரு துருவங்களான ஈ.பி.டி.பி. யின் ஜீவனும் கூட்டமைப்பின் நடனேந்திரனும் எமது சபையின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபடுகின்றனர். இவர்களை ஆண்டவன் ஆசிர்வதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் தவிசாளர் திருமதி ஐங்கரன் உறுப்பினர்களான கனகரசன், சசிகுமார், நடனேந்திரன், செல்வக் குமார் ஐயலிங்கம், சபாநாய கம், இராசதுரை, பாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றியதுடன் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி உதவினர்.

## கல்லுண்டாய் கழிவுகளால் மக்களுக்கு பேராபத்து

### நவாலி முருகானந்தா ச.ச.நிலைய உப தலைவர் மகேந்திரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் ஆபத்து மிகு கழிவுகளால் நவாலி-ஆனைக்கோட்டை, காக்கைதீவு மற்றும் அராலி மக்கள் குடிபெயர வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் இவ்வகையான கழிவுகள் கொட்டப்படுவதனை உடன் நிறுத்த வேண்டும் என நவாலி முருகானந்த சனசமூக நிலைய உப தலைவரும் வலி. தென்மேற்கு பிரதேச சமூக ஆர்வலருமான செல்லத்துரை மகேந்தரன் நேற்று காட்டமாக தெரிவித்தார்.

மேற்படி கல்லுண்டாய் ஆபத்துமிகு கழிவுகளால். மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்து குறித்து சமூக ஆர்வலர்கள் செ.மகேந்திரன் மேலும் கூறுகையில்,

வலி.தென்மேற்கு 28 கிராம பிரிவினை கொண்ட பிரதேசம் இதில் ஆனைக்கோட்டை அராலி, காக்கைதீவு மக்களுக்கு அண்மையல் உள்ள கல்லுண்டாய் பிரதேசம் கழிவுகளின் குதமாக மாறியுள்ளது.

இங்கு யாழ்.மாநகர சபையின் கழிவுகள் வகைதொகையின்றி கொட்டப்படுகின்றன. இதில் ஆஸ்பத்திரி கழிவு, மலக்கழிவு, திண்மக்கழிவு மற்றும் பல்லாயிரக்கணக்கான பொலித்தீன்பை நிரம்பிய கழிவுகள் என கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன.

இதனால் வளம் முற்றாக அழிகிறது. வயல் நிலம் யாவும் பொலித்தீன் கழிவுப்பைகளால் நிரம்பியுள்ளன.

அத்துடன் அங்கு கழிவுகள் பொருத்தமற்ற தொழில்நுட்பமின்றி எரிக்கப்படுவதனால் அங்குவரும் புகைமூட்டம் கடல் காற்றுக்கு கிராமம் நோக்கி நகருகின்றது.

இதனால் சுவாச நோய் புற்றுநோய் என்பன ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே உள்ளூராட்சி சபையின் கழிவு கொட்டப்படு வதை உடன் நிறுத்தி உயிராபத்தில் இருந்து மக்களை காப்பாற்ற அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் பாரம்பரிய கைத்தொழில்கள மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர் மு.சந்திரகுமார் அரச [illegible]திபர் மத்திய சுற்றாடல் அமைச்சு ஆகியோர் உடன் தலையிட வேண்டும் என அவசர கோரிக்கையை முன் வைத்துள்ளார் சமூக ஆர்வலர் செ.மகேந்திரன்.

### வெளியார் தலையீட்டுக்கு எதிர்ப்பு

## கொழும்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஐ.நா.அலுவலகம் முன்றலில்




ஐ.நா. மற்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் என்பன இலங்கையில் மேற்கொள்ளும் தலையீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நேற்று ஒன்று இடம் பெற்றது.

தேசாபிமான தேசிய முன்னணி (தேசமாமக ஜாதிக பெ்ரமுன) இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருநதது. குறித்த அமைப்பின் தலைவர் அகுலுகல்லே ஜினாநந்தே தேரர் தலைமையில் விகார மஹா தேவி விகாரையின் புத்தர் சிலை அருகே நேற்றுக் காலை ஆரம்பமான பேரணி ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்தில் முடிவுற்றது.

பெருந்தொகையான பொலிசார் ஊர்வலத்துக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக ஹவ்லொக் வீதி, கொழும்பு கறுவாத்தோட்டப் பகுதிகளில் நண்பகல் வரை போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருந்தது

## வறிய மக்களின் சிகிச்சைக்கு .யுனிசெவ் நிறுவனம் உதவி

### கிளியில் 80 பேர் நன்மையடைவர்

யுனிசெவ் நிதி பங்களிப்பூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர். பிரிவில் 47 பேருக்கும், கண்டாவளை பிரதேச செயலர். பிரிவில் 26 பேருக்கும்,பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 7 பேருக்கும் மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்து உதவி நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்கு செல்லும் 80 வறிய நோயாளிகளுக்கு தலா 1500 ரூபா வீதம் வழங்க 120,000 ரூபா நிதியை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிறுவனத்திடம் பெற்று பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

வறிய நிலையிலுள்ள நோயாளர்கள் தூர இடங்களுக்கு மருததுவ சிகிச்சைக்கு செல்லும் போது இவ்வித உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுவது வழக்கமானதாகும்.கிளிநொச்சி மாவட்டத்தில் தூர இடங்களிலிருந்து கிளிநொச்சி மருத்துவ மனைக்கு அல்லது யாழ்ப்பாணம் வவுனியா கொழும்பு, கண்டி போன்ற தூர இடங்களுக்கு செல்பவர்களுக்கே இவ்விதமான உதவித் தொகை வழங்கப்படுவது வழக்கமானதாகும்.

வட மாகாணத்தின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதே போன்ற மருத்துவ உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இந்த நிதி உதவித் திட்டம் நடைமுறையில் உள்ளது.இதே போல வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.